பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 28 வியாழக்கிழமை (13-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:18

# மகேஸ்வரனுக்கு எதிராகச் சதியா? கூட்டணி, ரெலோ அடியோடு மறுப்பு!

## ஆனந்தசங்கரியும் அடைக்கலநாதனும் நேற்று அறிக்கை



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை மகேஸ்வரனுக்கு வழங்கக்கூடாது என்று ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் மூத்த பிரமுகர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்புகொண்டு வற்புறுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சி உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேற்றைய உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியாகிய செய்தியை கூட்டணியும் ரெலோவும் மறுத்திருக்கின்றன.

அந்தச் செய்தியில் கூறப்பட்ட தகவல்களை அடியோடு நிராகரித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் நேற்று அறிக்கைகளை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

**கூட்டணி**

கூட்டணியின் சார்பில் வீ.ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ்.மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் அவர்களுக்கு வழங்கப்படவிருந்த வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுப் பதவியை தடுத்துவிட்டது என்ற கருத்துப் பட பத்திரிகையில் வந்த செய்தியை நான் வன்மையாக மறுக்கிறேன். த.வி.கூட்டணி எந்தச் சந்தர்ப்பத்திலும் யாரிடமும் அவருக்கு அப்பதவியை வழங்கவேண்டாம் என்று கோரவில்லை.



த.வி.கூட்டணி உறுப்பினர்கள் எவரும் அமைச்சுப் பதவிகளில் அக்கறை கொள்ளவுமில்லை.

இத்தகைய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருவது எமக்குப் பெரும் அதிருப்தியை

(2ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்!

## ஆயுதங்கள் அபகரிப்பு வாகனங்கள் தீக்கிரை!

**மட்டக்களப்பு,டிசெம்பர்13**

**மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வாழைச்சேனை பொலீஸ் நிலையம் மீது புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி அதனை முற்றாக அழித்துள்ளனர். அங்குள்ள களஞ்சியத்திலிருந்த பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் அள்ளிச் சென்றிருக்கின்றனர்.**

நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குச் சற்று முன் பெரும் எண்ணிக்கையான புலிகள் பொலீஸ் நிலையத்தைச் சூழ்ந்து கொண்டு தாக்கியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் புலிகள் நடத்திய முதலாவது பெரும் தாக்குதல் இது என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

புலிகளின் ஜெயந்தன் படையணியே இந்தத் தாக்குதலை நடத்தி

(10ஆம் பக்கம் பார்க்க)

## தளபதி ஜீவன் நினைவாக நடத்தப்பட்ட தாக்குதல்!

மட்டக்களப்பு,டிசெ.13

கடந்த ஞாயிறன்று மட்டக்களபபு மியான்குளத்தில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஜீவனினதும் (எழில்) ஏனைய ஏழு போராளிகளினதும் நினைவாகவே வாழைச்சேனை பொலீஸ் நிலையம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு சூட்டோடு சூடாகப் புலிகள் பதிலடி கொடுத்து படைத்தரப்புக்குச் சேதங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

வாழைச்சேனை பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலில் தமது தரப்பில் நான்கு போராளிகள் உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்திருக்கின்றனர். அவர்களின் பெயர்கள் வரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு முகாம் மீதும் மூதூரில் புலிகள் தாக்குதல்!

மட்டக்களப்பு,டிசெ.13

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வாழைச்சேனை பொலீஸ் நிலையம் தாக்கப்பட்ட அதேசமயம் மூதூரில் பாலத்தோப்பூரில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாம் மீதும் புலிகள் தாக்கினர்.

இத்தாக்குதலில் புலனாய்வுப் பிரிவுப் படையினர் மூவர் கொல்லப்பட்டனர்; 12 பேர் படுகாயமடைந்தனர்.

பள்ளிக்குடியிருப்பு, பட்டிதிடல் பிரதேசங்களில் இருந்து புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது. திருகோணமலை மங்கிபிரிட்ஜ் இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் பதிலுக்கு ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

தாக்குதலில் பலியான படையினரின் சடலங்கள் சேருநுவர வைத்திய

(10ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு அபிவிருத்திப் பொறுப்பை ஒரு மாதத்தில் வழங்க உறுதி

## மகேஸ்வரனை அழைத்து ரணில் பேச்சு; இந்துசமய விவகார அமைச்சை ஏற்றார்!

கொழும்பு,டிசெ.13

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நண்பகல் அழைத்து சுமார் 20 நிமிடநேரம் பேச்சு நடத்தினார்.

அதன் பின்னர் மகேஸ்வரன் தனக்கு வழங்கப்பட்ட இந்து கலாசார அமைச்சுப் பொறுப்பை ஏற்கச் சம்மதித்தார்.

முன்னதாக இந்து சமய விகார அமைச்சை தி.மகேஸ்வரனுக்கு வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்தபோது அவர் அதனை ஏற்கமறுத்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவற்றின் பிரமுகர்கள் திரைமறைவில் மேற்கொண்ட இரகசிய சதித்திட்டத்தினால் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுப் பதவி மகேஸ்வரனுக்கு மறுக்கப்பட்டதை அடுத்தே அவர் இந்து சமய விவகார அமைச்சையும் ஏற்க மறுத்துவிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இதனையடுத்து -

நேற்று நண்பகல் அமைச்சரவை பதவி ஏற்பதற்கு முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகேஸ்வரனை அழைத்துப் பேசினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு இரு அமைச்சர்கள் சமுர்த்தி மீண்டும் திஸாநாயக்காவிடம்

### புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு,டிசெ.13

ஐ.தே.கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை நேற்று மாலை 5.45 மணியளவில் பதவியேற்றது.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவியேற்பு வைபவம் எளிமையாக இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கைத்திட்டமிடல் அமைச்சராகப் பதவியேற்றதை அடுத்து ஏனையோர் பதவியேற்றனர்.

**அமைச்சரவை விவரம் 2ஆம் பக்கத்தில்**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து கட்சிமாறிய முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்க, மஹிந்த விஜயசேகர, பந்துல குணவர்த்தன ஆகியோரும் ஜனாதிபதி முன் பதவிப் பிரமாணம் செய்தனர்.

25 பேர் கபினட் அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும் 28 பேர் கபினட் அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாகவும் 9 பேர் பிரதி அமைச்சர்களாகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

பாதுகாப்புத்துறைக்கு இரு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சராக திலக் மாரப்பனவும், உள்நாட்டுப் பாதுகாபபு அமைச்சராக ஜோன் அமரதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### ரணில் நாளை புதுடில்லி செல்கிறார்

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பான ஆரம்ப நடவடிக்கையாகவே பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்கின்றார் என்றும்-

அங்கு இந்தியத் தலைவர்களுடன் இது தொடர்பான பேச்சுக்களை அவர் நடத்துவார் எனவும் - அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

### மங்கள சமரவீர நீதிமன்றில் ஆஜர்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மாத்தறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்.

அக்குரஸ்ஸவில் இடம்பெற்ற தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட உத்தரவை அடுத்தே அவர் ஆஜரானார்.

அவரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் எம்.மொஹமட் அனுமதித்தார். (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

நவம்பர் இறுதியில் வழங்கப்படும் எனத் தெரிவித்த

# இலவச சீருடை, பாடநூல்கள் இன்னும் வந்து சேரவில்லை!

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாடநூல்கள், இலவச சீருடைகள் என்பன இதுவரை யாழ்ப்பாணத்துக்கு வந்துசேரவில்லை.

கடந்த நவம்பர் மாத இறுதியில் இவை யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவிடும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தபோதும் இதுவரை இவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவில்லை என யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இவை ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் குறைகேள் சேவையின்போது இது தொடர்பாகக் கொழும்பில் இருந்து வந்திருந்த சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் மேலதிக கல்விப் பணிமனை அலுவலர்கள் முறையிட்டிருந்தாகக் கூறப்படுகிறது. ஆனால் ஆண்டுதோறும் பாடநூல் விவகாரத்தில் வஞ்சிக்கப்பட்டுவரும் குடாநாட்டு மாணவர்கள் அடுத்த ஆண்டும் பாடப் புத்தகங்களுக்காக ஆலாய்ப் பறக்கநேரிடும் என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் பதவியிலிருந்த அரசியல்வாதிகளை பாடப் புத்தக விநியோகக் குறைபாட்டுக்குக் குற்றஞ்சாட்டி வந்த தற்போதைய நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர்கள் தமது பதவிக் காலத்தில் பாடப் புத்தகங்கள் விநியோகம் சீராக இடம்பெற என்ன செய்யப்போகிறார்கள் என்று குடாநாட்டு மாணவர்களும், பெற்றோரும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை -

கொழும்பிலிருந்து பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகளை எடுத்துவர சர்வதேச செஞ்சிலுவைக் குழு மற்றும் படைத் தரப்பினரின் உதவி கோரப்பட்டுள்ளதாக கடந்த ஆண்டில் பல தடவைகள் கல்வித் துறை வட்டாரங்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10-8)

கரவெட்டி வாள் வெட்டுச் சம்பவம்:

## ஜெகனின் குற்றச்சாட்டுக்கு ஐ.தே.க. வேட்பாளர்கள் மறுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

கரவெட்டி அத்துளு அம்மன் கோயில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துக்கும் தமக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்று ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்ட பொ.சிவபாதம், இ.அருணாசலம் ஆகியோர் மறுத்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கரவெட்டிப் பகுதியில் நடைபெற்ற சண்டைக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட இ.அருணாசலம், பொ.சிவபாதம் ஆகியோருடைய குண்டர்களே காரணம் என ஈ.பி.டி.பியின் யாழ்.பிரதேசப் பொறுப்பாளர் ஜெகன் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை. அந்தச் சம்பவத்துடன் எமக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ எந்தத் தொடர்பும் இல்லை.

இது அந்த ஊரில் உள்ள மாணவி ஒருவர் ரியூசனில் இருந்த வரும்போது இளைஞர்கள் சிலர் அவருடன் சேஷ்டைவிட்டதனால் ஆரம்பமான ஊர் சண்டையே தவிர இதற்கும் எமது கட்சிக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

இந்தச் சம்பவத்துக்கு ஜெகன் அரசியல் சாயம் பூசுவது மிகவும் கேவலமான ஓர் அரசியல் நிலைப்பாடாகும் - என்றுள்ளது. (ம)

## அமைச்சரவை விவரம் ஒரே பார்வையில்...

**புதிய கபினெட் அமைச்சர்கள்**

★ ரணில் விக்கிரமசிங்க - பிரதமர், கொள்கை திட்டமிடல்.
★ கே.என்.சொக்ஸி - நிதி
★ டிரோன் பெர்னாண்டோ - வெளிவிவகாரம்.
★ பி.தயாரத்ன - சுகாதாரம்.
★ ஜோன் அமரதுங்க - உள்நாட்டுப் பாதுகாப்பு.
★ திலக்மாரப்பன - பாதுகாப்பு.
★ காமினி லொக்குகே - சுற்றுலாத்துறை.
★ கருஜயசூரிய - மின்சக்தி, எரிசக்தி.
★ காமினி அத்துகோறளை - போக்குவரத்து, பெருந்தெருக்கள், விமானத்துறை.
★ அலிக் அலுவிகார - உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி.
★ எம்.எச்.மொஹமட் - மேற்குப் பிராந்திய அபிவிருத்தி.
★ ஜே.எம்.லொக்குபண்டார - நீதி, சட்டச் சீர்திருத்தம், பௌத்த விவகாரம்.
★ ஜயவிக்கிரம பெரேரா - நீர்ப்பாசனம், நீர்முகாமைத்துவம்.
★ எஸ்.பி.திஸாநாயக்க - விவசாயம், கால்நடை, சேமநலன்.
★ ஜி.எல்.பீரிஸ் - கைத்தொழில் அபிவிருத்தி.
★ ரவூப் ஹக்கீம் - கப்பல் போக்குவரத்து, துறைமுக அபிவிருத்தி.
★ அமர பியசீலி ரத்நாயக்க - மகளிர் விவகாரம்.
★ ஆனந்த குலரத்ன - தென் பிராந்திய அபிவிருத்தி.
★ ருக்மன் சேனநாயக்கா - சுற்றாடல், இயற்கை மூலவளங்கள்.
★ ஆறுமுகம் தொண்டமான் - வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு.
★ மஹிந்த விஜேசேகர - மீன்பிடி, சமுத்திர மூலவளங்கள்.
★ லக்ஷ்மன் கிரியெல்ல - தோட்டக் கைத்தொழில்.
★ திஸ்ஸ அத்தநாயக்க - மத்திய பிராந்திய அபிவிருத்தி.
★ பந்துல குணவர்த்தன - கிராமிய பொருளாதாரம்.
★ ஏ.ஆர்.எம்.காதர் - கூட்டுறவு.

**கபினெட் அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள்**

★ கருணாசேன கொடித்துவக்கு - மனிதவளம், கல்வி, கலாசாரம்.
★ மகிந்த சமரசிங்க - தொழில், வேலைவாய்ப்பு.
★ லக்ஷ்மன் செனிவரத்ன - நீர் முகாமைத்துவம்.
★ பியசோம உபாலி - அரச போக்குவரத்து.
★ இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் - வெகுஜன தொடர்பு சாதனம்.
★ ஏ.எச்.எம்.அஸ்வர் - நாடாளுமன்ற விவகாரம்.
★ ரவி சமரவீர - சமூக சேமநலன்.
★ பி.ஹரிஸன் - வீடமைப்பு அபிவிருத்தி.
★ வஜிர அபயவர்த்தன - பொது நிர்வாகம்.
★ ரவி கருணநாயக்க -வர்த்தக, நுகர்வோர் விவகாரம்.
★ லால் கமகே - வெளியுறவு உதவி.
★ ஏள் குணசேகர - உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி.
★ பி.சந்திரசேகரன் - தோட்ட உட்கட்டமைப்பு.
★ ஆர்.ஏ.டி.சிறிசேன - சமுர்த்தி நலன்.
★ சுரனிமல ராஜபக்ஷ - பாடசாலைக் கல்வி.
★ ஜயலத் ஜயவர்த்தன - புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், அகதிகள் விவகாரம்.
★ கபீர் ஹாஷிம் - பிராந்தியக் கல்வி.
★ எச்.ஜி.பி.நெல்சன் - நீர்ப்பாசனம்.
★ ரஜித சேனரத்ன - காணி.
★ ஜயதிலக் பொடிநிலமே - வடமேற்கு பிராந்திய அபிவிருத்தி.
★ ஜோன்ஸன் பெர்னாண்டோ - விளையாட்டு, இளைஞர் விவகாரம்.
★ ரோகித பொகொல்லாகம - கைத்தொழில்.
★ சுசந்த புஞ்சிநிலமே - சிறு முதலீட்டு அபிவிருத்தி.
★ எம்.மஹ்ரூப் - நகர பொது வசதிகள்.
★ ஏ.எல்.எம்.அத்தாவுல - பெருந்தெருக்கள்.
★ நூர்டின் மஷூர் - வன்னி புனரமைப்புக்கு உதவி.
★ ரி.மகேஸ்வரன் - இந்து சமய விவகாரம்.
★ மிலிந்த மொறகொட - பொருளாதார சீர்திருத்தம், விஞ்ஞானம், தொழில் நுட்பம்.

**பிரதி அமைச்சர்கள்**

★ பந்துல குணவர்த்தன - நிதி
★ சஜித் பிரேமதாஸ - சுகாதாரம்
★ நவீன் திஸாநாயக்க -தோட்டக் கைத்தொழில்
★ இந்திக பண்டாரநாயக்க - சுற்றாடல், இயற்கை வளம்.
★ சாகல ரத்நாயக்க - சக்தி, மின்சக்தி.
★ முத்து சிவலிங்கம் - விவசாயம், கால்நடை.
★ பஷீர் சேகுதாவுத் - வீடமைப்பு.
★ அப்துல் காதர் - கடற்றொழில்.
★ மகிந்த விஜேசேகர - தென் பிராந்திய அபிவிருத்தி. (ஐ)

## கணக்காய்வுப் பரீட்சகர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

### 41 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு கணக்காய்வுப் பரீட்சகர் பதவிகளுக்கு 41பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. பிரயாண ஒழுங்கைச் செய்வதற்கான அரச அதிபரின் சிபார்சுக் கடிதமும் அத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரம் வருமாறு:-

செல்வி எம்.ரஜனிதேவி - குருக்கள் மடம், பி.ஜெயராஜா - திருநெல்வேலி, ஏ.சுபேசன் - வட்டுக்கோட்டை, கே.சுதாகரன் - 87,கச்சேரி நல்லூர் வீதி, சி.சிவசுதன் - துர்க்காபுரம், தெல்லிப்பழை, ஏ.ஜோஜ் ஜெறாட் - புலோலி, செல்வி ஏ.வில்லியன் அலெக்ஸி - பாசையூர், செல்வி என்.காயத்திரி - கரவெட்டி, எஸ்.பிரேம்குமார் - மானிப்பாய், ரி.சிவரூபன் - திருநெல்வேலி கிழக்கு.

செல்வி எஸ். அபர்ணா - கோப்பாய், செல்வி எஸ்.பிரமிளா - மானிப்பாய், ஏ.நாகேந்திரன் - கந்தர்மடம், எஸ்.ருத்திரன் - மானிப்பாய், எஸ்.ஜெயசீலன் - மானிப்பாய், செல்வி யு.உசாதேவி - கோப்பாய், செல்வி ரி. சுகிர்ஜினி - மீசாலை, எஸ்.சிறிதரன் - மல்லாகம், பி.முகுந்தன் - ஆனைக்கோட்டை, எஸ்.பரமசிவம் - கொக்குவில்.

கே.பிரதீபன் - சுன்னாகம், செல்வி எஸ்.தேவந்தினி - சுன்னாகம், ஜி.ரூபாகரன் - கொக்குவில், ரி.நவநீதன் - கோண்டாவில், வி.தனநாதன் - யாழ்.பல்கலைக்கழகம், செல்வி ஆர்.சுதர்ஜினி - தபால் திணைக்களம், யாழ்., செல்வி ஆர். தேவகலா - அரசடி வீதி, யாழ்., செல்வி எஸ்.ஜெயசுதா - கோப்பாய், செல்வி ரி.நிசாந்தி - உரும்பிராய்,

எம்.சிவகுமாரன் - நீர்வேலி, ஏ.செல்வேந்திரதாஸ் - சுன்னாகம், எஸ்.பீஷ்மன் - சுன்னாகம், வி.கதிர்காமலிங்கம் - புலோலி, செல்வி எஸ்.மதிவதனா - திருநெல்வேலி, செல்வி எம்.துரைராஜா - வலயக் கல்வித் திணைக்களம், சாவகச்சேரி, எஸ்.குகபாலன் - புலோலி, வி.கலைச்செல்வன் - தபால் திணைக்களம், யாழ்., எஸ்.சிவரஞ்சன் - கரவெட்டி, ஜி.ஜெகதீஸ்வரன் - திருநெல்வேலி, எஸ்.ரதீஸ்குமார் - குப்பிளான், செல்வி எம்.பூரணச்சந்திரா - சுன்னாகம்.

### தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி நெறிகளைத் தொடரும் அனைத்து மாணவர்களுக்குமான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

செய்முறைப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் எழுத்துப் பரீட்சைகள் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஐ-6)

## மகேஸ்வரனுக்கு எதிராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், அதிர்ச்சியையும் தருகிறது. ஐ.தே.கட்சி அவரை அமைச்சராக நியமிப்பது அக்கட்சியின் செயற் பாடே அன்றி எமது பணியல்ல. அதில் நாம் தலையிடவில்லை. கூட்டமைப்பின் ஒரே நோக்கம் யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், விடுதலைப் புலிகளின் தடை நீக்கம், அவர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைத் தீர்வு. இந்த வட்டத்துக்குள்ளேயே நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு இயங்கும் என்பதை மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

**ரெலோ**

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழின் செய்தி சம்பந்தமானது.

யாழ்.மாவட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கௌரவ மகேஸ்வரன் அவர்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக அவரது கட்சித் தலைவரால் நியமனம் செய்யப்படுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழீழ விடுதலை இயக்கமும் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தது மாத்திரமல்லாமல் அவர் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் தமிழர் ஒற்றுமை முன்னணி அரசாங்கத்துக்கு முக்கிய தேவைகள் ஏற்படும்போது ஆதரவு கொடுப்பதிலிருந்து விலகிக் கொள்ளும் என்று பயமுறுத்தியதனால் தான் அப்பதவி அவருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற தோரணையில் செய்தி வெளியிட்டிருப்பதாக அறிகின்றேன்.

மேற்படி செய்தியானது, வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களின் அமோக ஆதரவுடன் வெற்றிவாகை சூடி 15 உறுப்பினர்களை தன்வசம் வைத்திருக்கும் தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின்மேல் சேற்றை அள்ளிப் பூசுவதுடன் வேறு ஒருவருக்கு மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்திலேயே விஷமத்தனமாக வெளியிடப்பட்ட செய்தியாக நாம் கருதுகின்றோம்.

என்றும் நடுநிலை வகித்து செய்திகளை வெளியிடும் 'உதயன்' நாளிதழில் இப்படிப்பட்ட உண்மையற்ற செய்தி வெளியிடப்பட்டதை அறிந்து மிகவும் வேதனையடைகின்றேன்.

கௌரவ மகேஸ்வரன் அவர்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பதவியையோ அல்லது வேறு எந்தப் பதவியையோ வகிப்பதற்கு நாம் ஆட்சேபனை தெரிவித்ததும் இல்லை. மேலே குறிப்பிட்டதுபோல் அவருக்கு மேற்படி அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால் அரசுக்கு எமது ஒத்துழைப்புக் கிடையாது என்று நாம் தெரிவித்ததும் இல்லை என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிடுவதுடன், உண்மையற்ற இச்செய்திக்கு எனது கண்டனத்தையும் ஆட்சேபனையையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எந்தக் கொள்கைக்காக தமிழ் பேசும் மக்கள் எம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்களோ அந்தக் கொள்கைகளாகிய -

1. தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்.
2. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.
3. யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும்.
4. வடக்கு - கிழக்கு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும்.

ஆகியவற்றுக்காக அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுப்பதே எமது கொள்கை.

கௌரவ மகேஸ்வரன் அவர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பதவியோ அல்லது வேறு பதவியோ கொடுப்பது அவரது கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியினதும் அதன் தலைவரான கௌரவ பிரதமரதும் விருப்பு, வெறுப்புக்களைப் பொறுத்ததாகும். நாடாளுமன்றத்தின் எதிரணியிலுள்ள தமிழர் தேசிய ஒற்றுமை முன்னணியினராகிய எம்மை இச்சம்பவத்தில் இழுப்பது 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது' போலானது.

மேற்படி உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியின் பின்னணி எங்கிருப்பது என்பதை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அதை வெளியிட வேண்டும் என மதிப்பிற்குரிய உதயன் ஆசிரியரைக் கேட்டுக் கொள்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

***ஆசிரியர் குறிப்பு:***

*1) வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை மகேஸ்வரனுக்குக் கொடுக்கக்கூடாது என்று ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் மூத்த பிரமுகர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்புகொண்டு வற்புறுத்தியதாக ஐ.தே. கட்சி உயர்வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'உதயன்' நேற்று வெளியிட்ட செய்தி சரியானதே என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். இந்த மறுப்பு அறிக்கைகளைப் பத்திரிகைக்கு வெளியிடும் பிரமுகர்கள், தங்கள் பெயரிலேயே அத்தகைய செயல்களில் தாங்கள் ஈடுபடவில்லை என்பதை பிரதமருக்கும் எழுத்து மூலம் உறுதிப்படுத்தினால் அவர்களது நிலைப்பாடு மேலும் தெளிவுபடுத்தப்படும் என்பது எமது நம்பிக்கை.*

*2) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து என்ற பெயரில் தாம் அனுப்பிய 'பக்ஸ்' செய்தியில் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு வழங்கும்படி ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவசர அவசரமாக வற்புறுத்தினார் என்ற தகவலையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம். இந்தச் செய்தி தொடர்பாக நீண்ட அறிக்கை அனுப்பி மறுப்பும் கண்டனமும் ஆட்சேபமும் தெரிவிக்கும் அவர், அந்த அறிக்கையில் 'பக்ஸ்' செய்தி பற்றி எதுவும் குறிப்பிடாதது குறித்து ஆச்சரியப்படுகின்றோம்.*

(ஆ-சி)

## மரண அறிவித்தல்

### இராசையா செல்லத்துரை

**(ஆரிய பகவான் கடை உரிமையாளர், கைதடி)**

ஆனைக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட இராசையா செல்லத்துரை நேற்று (12.12.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஐயம்பிள்ளையின் (சிறி முருகன் சிற்றுண்டி அகம், ஆனைக்கோட்டை) அன்பு சகோதரன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லத்துரை
(சகோதரர்)

*முத்தவிநாயகர் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.*

(95869)

# 'அல்கெய்டா' சரண் குறித்து தோரா - போராவில் பேச்சு!



பெஷாவர் அருகே 'ஜலோசை' அகதிமுகாமில் உணவுக்காகக் காத்திருக்கும் ஆப்கான் அகதிகள். இவர்களில் அநேகர் யுத்தத்தால் உடல் ஊனமடைந்துள்ளனர்.

## ஆப்கான் போர் முடிவுக்கு வருகிறது?

காபூல்,டிசெ.13

ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பினரின் நிலைகள் மீது கடந்த எட்டு நாள்களாக நடத்தப்பட்ட வான், தரை.



தகர்க்கப்பட்ட அல்கெய்டா மறைவிடங்கள்

வழித் தாக்குதல்களையடுத்து அந்த் அமைப்பினர் சரணடையச் சம்மதித்துள்ளதாகத் தலிபான் எதிர்ப்புப் படையின் தளபதிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க இராணுவத்தின் உயரதிகாரியான ஜெனரல் ரிச்சேட் மேயர் இதனை உறுதிப்படுத்தினார்.

ஆயினும் கிழக்கு ஆப்கானிஸ்தானின் தோரா - போரா மலைப் பிராந்தியத்தில் தொடர்ந்த கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இப்பகுதியில் போரில் ஈடுபட்டுள்ள அல்கெய்டா அமைப்பினர் தாம் சரணடையப் போவதில்லை என்று கூறிவருகின்றனர். இவர்கள் சரணடைய ஒருநாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், பின்லேடனின் அல்கெய்தா அமைப்பில் இணைந்து போராடி வந்த வெளிநாட்டுப் போராளிகள் சரணடைவது குறித்து அல்கெய்டா குழுவினருக்கும், தலிபான் எதிர்ப்புக் குழுவுக்கும் இடையே தோரா - போரா மலைப்பகுதியில் பேச்சுக்கள் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பெரும்பாலும் வெளிநாடுகளைச் சேர்ந்த அல்கெய்டா படையினர், பல நாடுகளின் இராஜதந்திரிகள் முன்னிலையில், ஐ.நா.அதிகாரிகளிடம் தாங்கள் சரணடையத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றனர்.

அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த சிலர் பாகிஸ்தானுக்குள் நுழைய எல்லைப் பகுதியில் மறைந்திருப்பதாகவும் -

தோரா - போரா குகைகள் அமெரிக்கத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட அல்கெய்டாவினரின் சடலங்களால் நிறைந்திருப்பதாக அவர்கள் தம்மிடம் கூறியுள்ளதாகவும் -

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

தோரா - போராவில் யுத்தம் விரைவில் நின்றுவிடும் என்று கூறமுடியாவிட்டாலும், அங்கு இடம்பெறும் போர் முடிவுக்கு வருவதற்கு அதிககாலம் பிடிக்காதென்று தான் கருதுவதாக அந்தச் செய்தியாளர் தெரிவித்தார்.

## ஐ.நா. அகதிகள் நிலைய மாநாடு ஜெனீவாவில் நேற்று ஆரம்பம்

ஜெனீவா,டிசெ.13

ஐ.நாவின் அகதிகள் முகவர் நிலையங்களின் மாநாடு நேற்று ஜெனீவாவில் ஆரம்பமானது.

1951 ஆம் ஆண்டின் அகதிகள் பிரகடனம் இந்த மாநாட்டில் பிரதானமாக ஆராயப்படவுள்ளது. உலக நாடுகளில் அகதிகளாக உள்ள மக்களின் எதிர்காலப் பாதுகாப்புத் தொடர்பாகவும் ஆலோசிக்கப்படவுள்ளது.

50 வருடங்களின் முன்னர், அகதிகள் பிரகடனம் உருவாக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் முக்கியமான மாநாடு இதுவாகும்.

பிரகடனத்தில் கைச்சாத்திட்ட 143 நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

1951 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தப் பிரகடனத்தில் யுத்தம், வறுமை, பட்டினி என்பனவற்றால் பாதிக்கப்பட்ட தற்கால மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு மாற்றங்கள் செய்யப்படுவது தொடர்பாக மாநாட்டில் ஆராயப்படும்.

இந்த மாநரட்டில் 50க்கும் மேற்பட்ட அரசுசார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொள்கின்றன.

(ஒ-9)

### கார்கில் போரில் மரணமான

## இந்திய வீரருக்கு சவப்பெட்டி வாங்கியதில் முறைகேடாம்!

கார்கில் போரில் மரணமடைந்த இராணுவ வீரர்களுக்காக சவப்பெட்டி வாங்கியதில் ஊழல் நடைபெற்றதாக இந்திய எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டைக் கிளப்பியுள்ளன.

1999இல் இந்தியாவின் கார்கில் மலைப்பிரதேசத்தில் பாகிஸ்தானில் இருந்து ஊடுருவிய தீவிரவாதிகளை விரட்டியடிக்க இந்தியப் படையினர் தாக்குதலை மேற்கொண்டனர்.

அப்போது நிகழ்ந்த போரில் உயிரிழந்த இந்திய வீரர்களின் சடலங்களுக்காக அலுமினியத்தாலான சவப்பெட்டிகள் வாங்கப்பட்டதில், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பாதுகாப்புத்துறையில் நிகழ்ந்த இந்த, ஊழலுக்குப் பொறுப்பேற்று, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகவேண்டும் என்று காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பான அமளியால் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்றுமுன்தினமும், நேற்றும் ஸ்தம்பித்தன.

இதற்கிடையில்,

கார்கில் மோதல் உச்சக்கட்டத்தில் இருந்தபோது சவப்பெட்டிகள் வாங்கப்பட்டதால், அவற்றின் தரத்தையும், விலையையும் பரிசீலிக்க முடியவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் விளக்கமளித்துள்ளார்.

அலுமினிய சவப்பெட்டிகளை விநியோகித்த அமெரிக்க நிறுவனம், வியாபார ஒப்பந்தத்தை மீறி, 18கிலோ கிராம் எடையுள்ள சவப்பெட்டிகளுக்குப் பதிலாக, 54 கிலோகிராம் எடையுள்ள சவப்பெட்டிகளை வழங்கியதால், நிறுவனத்துடனான ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெகல்கார் ஆயுதப்பேர ஊழல் குறித்த விசாரணைகளை எதிர்கொண்டுவரும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தற்போது சவப்பெட்டி ஊழலையும் சந்திக்க நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)

## நூறாண்டு காணும் நோபல் பரிசுகள்

நோபல் பரிசு வழங்கும் அமைப்பு கடந்த திங்கட்கிழமை தனது நூறாவது ஆண்டு நிறைவை ஒஸ்லோவிலுள்ள தனது தலைமையகத்தில் கொண்டாடியது.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம் மற்றும் சமாதானம் ஆகிய 5 துறைகளில் 1901 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் பரிசு வழங்கிவரும் சர்வதேச அமைப்பு என்று 'நோபல்' பரிசுகள் வழங்கும் அமைப்பு புகழப்படுகிறது.

டைனமைற்றைக் கண்டுபிடித்த 'நோபல்' என்ற விஞ்ஞானி தனது சொத்தைக்கொண்டு 'நோபல்' பரிசு வழங்கும் அமைப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## இஸ்ரேலின் நேற்றைய வான் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்!

காஸா,டிசெ.13

காஸா பிரதேசத்தில் உள்ள பலஸ்தீன நிலைகள் மீது இஸ்ரேலிய ஹெலிகள் நேற்று நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டனர்; 7 பேர் காயமடைந்தனர்.

கான் யூனுஸ் நகரில் பலஸ்தீன அகதி முகாமருகே இஸ்ரேலிய ஹெலிகள் நடத்திய தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் உயிரிழந்தார். பலஸ்தீன விடுதலை இயக்க உறுப்பினர்கள் இருவர் இதில் காயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலியத் தாக்குதலில் உயிரிழந்த பர்கான் அஷ்ஹூமோனி என்ற 3 வயதுப் பலஸ்தீனப் பாலகனின் உடலை உறவினர்கள் அடக்கம் செய்துகொண்டிருந்த மயானத்தில் இஸ்ரேலிய ஹெலிகள் இரண்டாவது தாக்குதலை நடத்தின. இதில் மேலும் இருவர் இறந்தனர்.

இஸ்ரேலிய டாங்கிகள் சூட்டைத் தொடர்ந்து, வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர்.



இஸ்ரேலின் வான் தாக்குதலில் சிதிலமான பலஸ்தீனப் பாதுகாப்பு நிலையம்.

பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகும் இஸ்ரேலிய குஷ் கதிப் குடியிருப்பின் அருகே பலஸ்தீன அகதிகள் தங்கியுள்ள கான் யூனுஸ் முகாம் உள்ளது.

குஷ் கதிப் குடியிருப்பை நோக்கி நேற்றுக் காலை கான் யூனுஸ் முகாமருகே இருந்த கட்டடங்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் -

இதனையடுத்தே அந்தக் கட்டடங்களின் மீது இஸ்ரேலிய ஹெலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் - இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.



இஸ்ரேலியத் தாக்குதல்களைக் கண்டித்து பலஸ்தீனர் நேற்றுமுன்தினம் நடத்திய பேரணி.

இதற்கிடையில், மேற்குக்கரை நகரான துல்காமில் நேற்றுமுன்தினம் இஸ்ரேலியச் சோதனைச்சாவடியில் நிறுத்தாமல் சென்ற காரின் மீது இஸ்ரேலியப் படையினர் சுட்டதில் காரில் பயணித்த இரு பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டனர்.

இது ஒருபுறமிருக்க தீவிரவாதக் குழுக்களை ஒடுக்கப் பலஸ்தீன அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு பலஸ்தீன நிலைகள் மீதான தாகுதல்களை இஸ்ரேல் நிறுத்திவைக்க வேண்டும் என்று, அமெரிக்க சிறப்புத் தூதர் அன்ரனி ஜின்னி இஸ்ரேலிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

(ஒ)



தாக்குதலில் உயிரிழந்த 3 வயது பர்கான்.

## முன்னாள் பிரதமர் ஹசீனா மீது பங்களாதேஷில் ஊழல் வழக்கு



டாக்கா,டிசெ.13

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக ஊழல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவரது அமைச்சரவையில் பதவி வகித்த 4 அமைச்சர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

'மிக் - 29', யுத்த விமானங்கள் எட்டு வாங்கப்பட்டதில் நிகழ்ந்த முறைகேடுகள் குறித்தும், விசேட வர்த்தக வலயத்தை உருவாக்கியதில் ஆதாயம் கருதி சட்ட விதிகளை மீறியது பற்றியும் இரு வழக்குகள் ஷேக் ஹசீனா மீது தொடரப்பட்டன.

முன்னாள் அமைச்சர்களான மொஹமட் நசீம், ரபீகுல் இஸ்லாம், அக் லைசல் ஹக், கபீர் ஹூசைன் ஆகியோர் மீது அதிகாரத்துஷ்பிரயோகம், வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தது ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஊழல் தடுப்புத்துறை இந்த வழக்குகளைத் தொடுத்துள்ளது. பங்களாதேஷில் கலீதாஷியா பிரதமராகப் பதவியேற்ற பின்னர், முன்னைய அரசின் தலைவர்களுக்கு எதிராக ஊழல் வழக்குத் தொடரப்படுவது இதுவே முதற்றடைவையாகும்.

(ஒ)

## ஆஸ்திரேலியாவில் அகதிகளுக்கு உளவியல் தாக்கங்கள் அதிகரிப்பு!

சிட்னி,டிசெ.13

ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக நுழைந்ததற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளில் பெரும்பாலானவர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளதாக அகதிகளுக்கான மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரி நுழைந்த சுமார் 5 ஆயிரம் சட்டவிரோதக் குடியேறிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தடுப்பு முகாம்களில் உள்ளனர்.

இந்த முகாம்கள் வசதிக் குறைவுகளுடன் காணப்படுகின்றன. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் தம் மீதான விசாரணைகள் முடியும் வரை அங்கேயே வருடக்கணக்காக தங்க வேண்டியுள்ளது.

இதனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளதாக, அவர்களது நலன்களைக் கவனித்து வரும் மருத்துவர் குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

மனஅழுத்தம் உட்பட உளவியல பாதிப்புகளுக்கு ஆளாகியிருப்பதால், அகதிகளில் பலர் தற்கொலை செய்துள்ளனர். அத்துடன் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போன்றவற்றில் அடிக்கடி அவர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் அந்தக்குழு தெரிவித்தது.

மருத்துவக் குழுவின் அறிவிப்பை அடுத்து அகதிகளுக்கு உளவியல் மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சையளிக்க ஆஸ்திரேலிய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வணிகக் கல்வியும் கணக்கீடும்

தரம் 10, 11இற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆரம்பம்: 14-12-2001 பிற்பகல் 4.00 மணி தொடர்பு: ஆசிரியர் தபாலகிருஷ்ணன், இல.84, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (95744)

### தவறிவிட்டது

தவசிகுளம், மிருசுவிலைச் சேர்ந்த சின்னராஜா பிரகாஷ் என்பவருடைய தே.அ.அ. (இல.813122537V), வி. அ. அட்டை என்பன 08.12.2001 அன்று அரியாலைக்கும் கல்வியங்காட்டுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தர்சினி ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (95818)

### விற்பனைக்கு

வெஸ்பா 'இத்தாலி' ஸ்கூட்டர், சிங்கர் குளிர்சாதனப்பெட்டி, சொனி TV 2093 ME3 மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (சித்திரகலா ஸ்ரூடியோவுக்குப் பின்புறம் குறிஞ்சிசீலன்) (95808)

இறைச்சிக்கோழியும், பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல.105, புகையிரத வீதி (வீரகேசரி காரியாலயத்திற்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில்), யாழ்ப்பாணம். (95824)

சமிரா, பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 14.12.2001 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.No.: 3529, 2867. (95834)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கச்சேரி பஸ் தரிப்பிடத்தில் பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் 8/1, கற்பகப் பிள்ளையார் வீதி, கச்சேரி நல்லூரில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும். (95809)

### ஒரு காதலின் கதை

யாழ்.சேவையில் 'நல்லதோர் வீணை' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாவல் ஒரு காதலின் கதை, இலங்கையின் முதலாவது இனக்கலவரத்தை சித்திரிப்பது. 182 பக்கங்கள். (95804)

### கணிதம்

ஆண்டு 5 முதல் 11 வரை கணிதம் தனியாகவும், குழுக்களாகவும் கற்பிக்கப்படும். தொடர்பு: திரு.வை. லிங்கேஸ்வரன், 145/3, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (95821)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய, செவ்வாய் தோஷமற்ற (அரச உத்தியோகத்தர்) மணமகளுக்கு தொழில் புரியும் மணமகன் தேவை. குறிப்பு, ஜாதகங்களுடன் தொடர்புகொள்ளவும்: நா.சபாரத்தினம், சதுமலை மேற்கு, மானிப்பாய். (95830)

### தொடர்புகொள்ளவும்

தொலைபேசி கேபிள் இணைப்பு விற்பனை செய்ய உள்ளவர்கள் விலை விவரத்துடன் தபால் மூலம் தொடர்புகொள்ளவும்: க.கனகராசா, 521/5, பருத்தித்துறை வீதி, நல்லூர். (95839)

### சங்கீத சபைப் பரீட்சை

வட இலங்கை, சங்கீத சபையின் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் நாளை வெள்ளிக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-10)

---

## நன்றியும் பாராட்டும் என்றென்றும் உங்களுக்கே

நெடுந்தீவு மேற்கு

**ஸ்ரீ மெலிஞ்சியம்பதி காளி அம்மன் ஆலயம்**

மேற்படி ஆலயப் புனரமைப்புத் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்ட இரண்டரை லட்சத்தில் ரூபா ஒன்றேகால் லட்சத்தை உடனடியாக வழங்கியமைக்காக,



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய*

**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

*நெடுந்தீவு ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், நெடுந்தீவு பிரதேச சபை உப தலைவருமாகிய*

**திரு.K.நவநீதன் (மோகன்)**

அவர்களையும்



*நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்*

**புலவர் A.W.அரியநாயகம்** அவர்களையும்

**மனப்பூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.**

*4 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.*

நெடுந்தீவு மேற்கு ஸ்ரீ மெலிஞ்சியம்பதி காளி அம்மன் ஆலய நிர்வாகத்தினர். (95843)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுச் சேவையில் தம்மை அர்ப்பணித்து, கூட்டுறவுத்துறைக்கு அளப்பரிய சேவை ஆற்றியதுடன், எமது சங்க வளர்ச்சிக்குப் பலவகைகளிலும் காலத்துக்குக் காலம் சிறப்பான சேவை ஆற்றி, உதவி ஆணையாளர், மாவட்ட கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர், முதலாம் தர கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உயர்வுகளைப் பெற்ற பின்வரும் பணியாளர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் மிகப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உதவி ஆணையாளர் பதவி உயர்வு பெற்றோர்

**திரு. பொ.சிவலிங்கம்**
**திருமதி யோகா செல்வரத்தினம்**

மாவட்ட கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உயர்வு பெற்றோர்

**திரு.நா.தவநாதன்**
**திரு.செ.திருச்செல்வம்**
**திரு.கு.குமாரகுருலிங்கம்**

முதலாம் தர கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உயர்வு பெற்றோர்

**திரு.கே.சின்னராசா**
**திரு.என்.கணேசு**
**திரு.என்.யோகேந்திரராசா**
**திரு.ரி.என்.ராஜா**
**திரு.என்.சிவநாதன்**
**திருமதி எஸ்.அழகேந்திரராசா**
**திரு.ரி.மோகன்**
**திரு.வி.கே.அருந்தவநாதன்**
**திரு.என்.பத்மசோதி**

தலைவர்,பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்.

*அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம், அளவெட்டி.* (C/19723)

---

## துயர் பகிர்கின்றோம்

ஊர்காவற்றுறை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரும் எமது நண்பருமாகிய திரு.ஞா.சோதிலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**ஞானசுந்தரமூர்த்தி பகவதிப்பிள்ளை**

அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து நாம் மிகுந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(95831) - தொழில்நுட்பப் பிரிவு நண்பர்கள்.

---

## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

கடந்த 15 வருட கால வன்செயல் அழிவுகளால் பெரிதும் பாதிப்புற்றிருந்த எமது சங்கத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு 15 லட்சம் ரூபாவை ஒதுக்கி, அதில் 7 1/2 லட்சம் ரூபாவைத் தந்துதவிய,



*ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான*

**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்

*ஈ.பி.டி.பி.யின் வலி. வடக்குப் பொறுப்பாளர்*

**திரு.தி.சிவகுமார் (வேலு)**

அவர்களுக்கும்



எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி.

(C/19724)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 10 - 1926 | 24 - 11 - 2000 |

**திருமதி சண்முகம் செல்லம்மா**

**திதி: 13.12.2001**

எம் மனங்களில் எங்கும் நிறைந்திட்ட
எமது அன்புத் தாயே!
எத்தனை உறவுகள் இருந்தென்ன?
ஆசையுடன்
'அம்மா' என்று அழைத்திட யாருமில்லையே!
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாதம்மா நம் துயர்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.*

தற்காலிக முகவரி:
'கலா பவனம்'
வல்லை வீதி, சங்கானை.

நிரந்தர முகவரி:
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

உங்கள் நினைவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள். (95844)

---

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சந்திரசேகர் பிரதீபா

*(9ஆம் ஆண்டு மாணவி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி பிரதீபா அவர்கள் 11.12.2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திரசேகர் - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகளும், பிரகாஷ், பிரசாத், பிரவீனா, பிறேமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி இராமசாமி மகேஸ்வரி, திருமதி சிவலோகநாதன் தனலட்சுமி, திருமதி பரமலிங்கம் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகளும், பூமணி, லக்ஸ்மி, சொர்ணம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தி (சுவிஸ்), தமிழ்ச்செல்வி (சுவிஸ்), சாந்தி (லண்டன்), வெண்ணிலா (ஜேர்மனி), பார்த்தீபன் (லண்டன்), பிரதீபன் (பிரான்ஸ்), உஷா (லண்டன்), விஜிதா, பகீரதன், ஷாளினி, துவாரகை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*19, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.* (95847)
நா.சந்திரசேகர் (தகப்பன்),
த.இராமசாமி (பெரியப்பா).

### பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்

*(சங்கரத்தை, வட்டுக்கோட்டை)*

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம் அவர்கள் 11.12.2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், சிவகுமார் (கொழும்பு), சுகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தேவகுமார் மற்றும் விஜயகுமார் (சங்கரத்தை), சூரியகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் நந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், நாகநந்தினி, பாலகுமாரி, யாமினி, பவானி, சத்தியகலா, கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சண்முகநாதன், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும், கேசவன், வைஷ்ணவி, தினேஷ், சந்தோஷ், கபில்ராஜ், டிவைனியா, அபினியா, பிரவீணன், ஆஷா, மனோஜன் ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*குளத்தடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை.*
சி.விஜயகுமார் (விஜி) (மகன்) (95845)

---

## 1st in Com., G.A.Q.

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பதிவுக்குரிய

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

இப்பதிவுகளுக்கு A/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

*அனைத்துப் பாடங்களினதும் விரிவுரைகள்*

***ஆரம்பம்: 15-12-2001.***

மேலதிக விவரங்களுக்கு: புதிய உயர் கல்லூரி

*ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.*

நிர்வாகி
S.அருள்நங்கை.

(95837)

# ஊவா மாகாண சபை அதிகாரம் ஐ.தே.கவின் கைக்கு மாறும்?

கொழும்பு,டிசெ.13


ஊவா மாகாண சபையின் அதிகாரம் ஐ.தே.கட்சியின் கைக்கு மாறும் அறிகுறிகள் தென்படுகின்றன.

சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 34. அதிகாரத்தில் உள்ள பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 17. இ.தொ.கா.உறுப்பினர் ஒருவரின் ஆதரவும் பொ.ஐ.முன்னணிக்கு உண்டு.

எதிர்க்கட்சியில் ஐ.தே.க.உறுப்பினர்கள் 14 பேரும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் 2 பேரும் உள்ளனர். இ.தொ.கா. இப்பொழுது ஐதேகவுடன் இணைந்திருப்பதால் மாகாணசபையில் பொ.ஐ.முன்னணியின் மொத்த பலம் 17 ஆகக் குறையலாம். எதிர்க்கட்சியின் மொத்த பலம் 17 ஆக உயரும்.

ஜே.வி.பி.உறுப்பினர்கள் இருவரும் நடுநிலையாகச் செயற்படவுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அதனால் ஓரிரு பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களதும் ஆதரவைப் பெற்று சபையின் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க ஐ.தே.க. முயற்சியில் இறங்கியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.(க)



கெருடாவில் அம்பிகை சனசமூக நிலையத்துக்கு 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை, சனசமூக நிலையத் தலைவர் இராசையா குணசேகரம் நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# குடாநாட்டில் கோழிகளுக்கு அம்மை நோய் பரவுகிறது!

## தடுப்பூசி போடுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

கோழிகளுக்கு அம்மை நோய் பரவிவருவதால் கோழிப்பண்ணை வளர்ப்பில் ஈடுபடும் பயனாளிகள் கோழிகளுக்குத் தடுப்பூசிகளை தமது பிரிவில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் தொடர்பு கொண்டு போட்டுக்கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் பல இடங்களிலும் கோழிகளுக்கு இந்த அம்மை நோய் பரவிவருகின்றது.

கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து உடன் அந்த நோய்க்குரிய தடுப்பு ஊசியைப் போடுவதன் மூலம் கோழிகளை அம்மை நோயில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ம-180)

# வவுனியாவில் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடத் தடை

வவுனியா, டிசெ.13

வவுனியாவில் உள்ள தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் வெளியே நடமாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் ஒவ்வொரு தமிழ்க் குழுக்களின் அலுவலகங்களிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை வவுனியா - வைரவப் புளியங்குளம் புளொட் அலுவலகம் முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ரெலோ அமைப்பின் ஆதரவாளர்களான இரண்டு பாலைகர்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் நால்வர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து வவுனியா மாவட்ட படைத் தளபதி இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். (க-9)

## ஆங்கில பாடநெறி: தகுதிகாண் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில பாடநெறிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

கே.எஸ்.தர்சிகா (கோப்பாய் தெற்கு), என்.கார்த்திகா (உடுப்பிட்டி), ஆர்.பாமினி (கரவெட்டி), பி.சுதர்சனா (அச்சுவேலி), எஸ்.எஸ்.சுதர்சினி (திருநெல்வேலி), எஸ.டர்மிலா (நெல்லியடி), கே.செல்வி (யாழ்ப்பாணம்)(க-3)

## மாணவருக்கு மண்ணெண்ணெய்

வடமராட்சி,டிசெ.13

எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தலா 2 லீற்றர் மண்ணெண்ணெய் புலோலி ப.நோ.கூ.சங்கத்தினால் வழங்கப்பட்டுவருகிறது.

சங்க எல்லைப் பரப்புக்குள் வதியும் மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டையை கிளைகளில் காண்பித்து மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க எல்லைப்பரப்பில் உள்ள மாணவர்களுக்கு ஒரு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-173-117)

## தீக்காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

குப்பிவிளக்குத் தட்டுப்பட்டு தீப்பற்றி எரிந்ததில் இளைஞர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளானார்.

கொக்குவில், தாவடி தெற்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இலங்கைநாதன் பரமேஸ்வரன் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

## பெண்களுக்கு பயிற்சி நெறி

வடமராட்சி,டிசெ.13

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் கல்வி பயின்ற 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் பெண்கள் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாமென பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜா அறிவித்துள்ளார்.

(க-173)

## அடிப்படை உரிமை மீறல் வழக்குகள்:

# யாழ்.இளைஞர்கள் இருவருக்கு 90 ஆயிரம் ரூபா நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,டிசெ.13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இரு யாழ்ப்பாண இளைஞர்களுக்கு நஷ்டஈடாக மொத்தம் 90ஆயிரம் ரூபாவை அரசதரப்பு வழங்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கண்ணன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் -

வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பரமசிவம் ஜீவன் என்பவருக்கு 40 ஆயிரம் ரூபாவும் -

நஷ்டஈடாக வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான மார்க் பெர்னாண்டோ, சி.வி.விக்னேஸ்வரன், அசோக டி சில்வா ஆகியோர் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். இவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைமீறல் மனுக்களின் விசாரணைகளின் தீர்ப்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இருவரும் புலிகளுடன் எந்தவித சம்பந்தமும் இல்லாதவர்கள் என்றும் - இவர்கள் வெறும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளான் என்றும் மனுக்களில் கூறப்பட்டுள்ளது.

(க-9)




சட்டத்தரணி சபா.ரவீந்திரன் எழுதிய 'தேசவழமை' எனும் சட்ட நூல் வெளியீட்டு விழா அம்பனை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நூலாசிரியர் சபா.ரவீந்திரன் காணப்படுகின்றார்.

## வாசகர் திருமுகம்

# குடாநாட்டில் மீண்டும் பாதீனியம்! அதனை அழிப்பார் எவருமில்லையா?

கடந்த ஒரு மாதமாகப் பெய்துவரும் மழையினால் குடாநாட்டில் மீண்டும் பாதீனியம் களை முளைக்க ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக மல்லாகம், மருதனார்மடம், இணுவில், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் பாதீனியம் பெரிதாக வளர்ந்து பூத்துக் குலுங்கிய வண்ணம் உள்ளது.

ஆனால் இதனை அந்தந்தக் கிராம மக்கள் அக்கறை இல்லாமல் வளர விட்டுள்ளனர். 'உதயன்' பத்திரிகை மூலமும், கருத்தரங்குகள் மூலமும் பாதீனியத்தால் ஏற்படும் தீமைகள் விளக்கப்பட்ட பின்னரும் மக்களுக்குப் பாதீனியத்திடமிருந்து குடாநாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை.

மேலும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் இதற்கு முக்கிய காரணம். பத்திரிகைகள் மூலம் "பாதீனியம் அழிக்கத் தவறின் தண்டனை!" என விளம்பரப்படுத்தியவர்கள் அதனை அழிக்கத்தவறியவர்களுக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை?.

பாதீனியம் களை குடாநாட்டில் இருந்து முற்றாக அழித்து ஒழிக்கப்பட வேண்டும் - எனவே குடாநாட்டு மக்களும் அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து அதனை அழிப்பார்களா?.

*இளவாலை.*

**சூழல் வளத்தில் அக்கறை கொண்ட ஒரு மாணவி.**

# ஆங்கில பாடத்திற்கு விண்ணப்பித்தோருக்கு அனுமதி மறுக்கப்பட்டது ஏன்?

18.11.2001ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 523பேர் அழைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி வெளியாகியிருந்தது.

இவர்களுக்கு சித்திரம், இந்து சமயம், கிறிஸ்தவம் போன்ற 15 பாடங்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் சர்வதேச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பாடத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் (அதிகாரிகள்) அதில் எதையும் குறிப்பிடவில்லை.

ஆங்கில பாடத்திற்கும், ஏனைய பாடங்களைப் போன்றே விண்ணப்பங்கள் கோரப்பட்டன. குறித்த புள்ளிக்கு மேற்பட்டவர்கள் அந்த நெறிக்கும் அனுமதிக்கப்படுவர் என்றே பலரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஆங்கில பாடத்திற்கு எவரையுமே அனுமதிக்காததன் காரணம் என்ன?.

ஆங்கில பாடத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் யாவருமே தகுதியற்றவர்களா? அல்லது ஆங்கில பாடத்தை இங்கு கற்க முடியாதா? இது தொடர்பாக எந்தவித தகவலுமே வழங்கப்படவில்லை. இது ஆங்கில பாடத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பெரும் ஏமாற்றத்தையும், மனவிரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தகுந்த அதிகாரிகள் இதற்கான விளக்கத்தைத் தெளிவுபடுத்துவார்களா? விண்ணப்பித்த மாணவர்களின் ஏமாற்றத்தை நீக்கத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?.

**ஆங்கில பாடத்திற்கு விண்ணப்பித்து காத்திருந்து ஏமாற்றமடைந்த மாணவனின் தந்தை.**

*பருத்தித்துறை.*

# கிறிஸ்தவ பாட ஆசிரியர் பற்றாக்குறை நீங்காதா?

இன்று குடாநாட்டில் அதிலும் குறிப்பாக தென்மராட்சி, வடமராட்சியில் உள்ள பாடசாலைகளில் கிறிஸ்தவ பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லை. இதனால் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆனால் கடந்த 01.12.2000 அன்று வடமராட்சியில் "கிறிஸ்துவிற்காக வாலிபர்" நிறுவனத்தினர் தரம் - 10 ஜி.சீ.ஈ.சாதாரண மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை நடத்தினர். இந்தக் கருத்தரங்கு வசதியற்ற - கதியற்றிருந்த மாணவர்கள் பலருக்குப் பயனுடையதாய் அமைந்தது. மேற்படி நிறுவனத்தின் பணிகளை குடாநாட்டில் உள்ள ஏனைய கிறிஸ்தவ அமைப்புக்களும் தொடரவேண்டும்.

*சாவகச்சேரி.*

**ப.அர்ச்சுதன்**

# கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,டிசெ.13

இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான கணக்காய்வு அத்தியட்சர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் "கணக்காய்வாளர் தலைமையில் அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம், கொழும்பு - 07" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

விண்ணப்பம் தொடர்பான சுற்றறிக்கையை யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருணன்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில்' அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ம-7)

## பிரதமர் பதவியேற்பு வைபவத்திற்கு அனுமதி மறுப்பு:

# ஜனாதிபதியின் செயலருக்கு எதிராக சி.என்.என். நிறுவனம் வழக்குத் தாக்கல்

கொழும்பு,டிசெ.13

சி.என்.என். தொலைக்காட்சி நிறுவனம் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்வதற்கும், படம் பிடிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாகவே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாலபட்டபெண்டிக்குத் தனது வழக்கறிஞர்கள் மூலம் நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளதாக சி.என்.என். தெரிவித்துள்ளதுடன் -

பாலபட்டபெண்டிக்கும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நீல்டால் கருணாரத்னவுக்கும் எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

(க-9)

# சிறந்த பண்ணையாளர்கள் யாழ்.மாவட்டத்தில் தெரிவு

## 90 பேருக்கு 19ஆம் திகதி பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாவட்டத்தில் சிறந்த கால்நடைப் பண்ணையாளர்கள் 90 பேருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை திருநெல்வேலியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் யாழ்மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 10 கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள சிறந்த ஆடு, மாடு, கோழி பண்ணை வளர்ப்பாளர்களில் ஒவ்வொரு பிரிவிலும் தலா 9பேர் என்ற அடிப்படையில் 90பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பண்ணை வளர்ப்பில் முதல் மூன்று பரிசில்களைப் பெறவுள்ளவர்களின் பெயர்கள் கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக வருமாறு:-

### மாடு வளர்ப்பு

☆ யாழ்ப்பாணம்:- முதலாம் இடம் - எஸ்.சிவகாந்தசீலன் (வண்ணார் பண்ணை), 2ஆம் இடம் - ரி.ஜெயராசா (யாழ்ப்பாணம்), 3ஆம் இடம் -ஆர்.கனகரட்ணம் (கொட்டடி),

☆ கோப்பாய்:- முதலாம் இடம் - திருமதி க.சிவாஜினி (கோப்பாய்), 2ஆம் இடம் - திருமதி தி.சரஸ்வதி (கோப்பாய்), 3ஆம் இடம் - மு.சிவக்குமாரதாஸ் (சிறுப்பிட்டி கிழக்கு).

☆ பருத்தித்துறை:- முதலாம் இடம் - பி.சிறிஸ்கந்தராசா (அல்வாய்), 2ஆம் இடம் - ஏ.சிவபாலகிருஷ்ணன் (புலோலி), 3ஆம் இடம் - ஆர்.இராமச்சந்திரன் (தொண்டமனாறு).

☆ வேலணை:- முதலாம் இடம் - ஏ.நாகராசா (ஊர்காவற்றுறை), 2ஆம் இடம் - பி.சிவபாதம் (வேலணை மேற்கு), 3ஆம் இடம் - ஈ.ஜேசுதாஸ் (ஊர்காவற்றுறை).

☆ கரவெட்டி:- முதலாம் இடம் - ரி.கதாகரன் (கரவெட்டி), 2ஆம் இடம் - ரி.தம்பிக்கண்டு (கரவெட்டி), 3ஆம் இடம் - ரி.மகாலிங்கம் (கரவெட்டி).

☆ வட்டுக்கோட்டை:- முதலாம் இடம் - கே.சிறிரங்கன் (வட்டுக்கோட்டை), 2ஆம் இடம் - எஸ்.சுந்தரராசா (தொல்புரம்), 3ஆம் இடம் -எம.சண்முகநாதன் (வட்டுக் கோட்டை).

☆ சங்கானை:- முதலாம் இடம் - எஸ்.சிவகுருநாதன் (கட்டுடை, மானிப்பாய்), 2ஆம் இடம் - பி.இராசகுலேந்திரன் (பண்டத்தரிப்பு), 3ஆம் இடம் - எஸ்.இராசதுரை (பண்ணாகம்).

☆ சாவகச்சேரி:- முதலாம் இடம் - எஸ்.எஸ்.சண்முகலிங்கம் (கைதடி), 2ஆம் இடம் - எஸ்.சிவபுண்ணியம் (கைதடி), 3ஆம் இடம் - வி.கார்த்திகேசு (மட்டுவில் தெற்கு).

☆ தெல்லிப்பழை:- முதலாம் இடம் - எஸ்.இரவீந்திரன் (தெல்லிப்பழை கிழக்கு), 2ஆம் இடம் - ஆர்.செல்வகுமார் (மல்லாகம்), 3ஆம் இடம் - என்.பாலச்சந்திரன் (மல்லாகம்).

☆ உடுவில்:- முதலாம் இடம் - வை.ஏகாம்பரம் (சுன்னாகம்), 2ஆம் இடம் - திருமதி கே.சந்தானம்மா (சுன்னாகம்), 3ஆம் இடம் - திருமதி எம்.இராசமலர் (உடுவில்).

### ஆடு வளர்ப்பு

☆ யாழ்ப்பாணம்:- முதலாம் இடம் - பி.சந்திரபாலன் (கோண்டாவில்) 2ஆம் இடம் - எஸ்.குகநாதன் (கந்தர்மடம்), 3ஆம் இடம் - எஸ்.லிங்கேஸ்வரன் (திருநெல்வேலி).

☆ கோப்பாய்:- முதலாம் இடம் - திருமதி ஆர்.இராஜேஸ்வரி (புத்தூர் வடக்கு), 2ஆம் இடம் - பூ.வைத்தியநாதன் (சிறுப்பிட்டி வடக்கு), 3ஆம் இடம் - பி.புஸ்பராணி (புத்தூர் வடக்கு).

☆ பருத்தித்துறை:- முதலாம் இடம் - வை.சிற்சபேசன் (புலோலி), 2ஆம் இடம் - ரி.ஞானசிவம் (வல்வெட்டித்துறை), 3ஆம் இடம் - கே.செந்தில்ராசா (புலோலி வடக்கு).

☆ வேலணை:- முதலாம் இடம் - ரி.தவநாயகம் (வேலணை), 2ஆம் இடம் - எஸ்.செலஸ்ரின் (ஊர்காவற்றுறை), 3ஆம் இடம் - கே.வேலுப்பிள்ளை (வேலணை வடக்கு).

☆ கரவெட்டி:- முதலாம் இடம் - கே.கனகரட்ணம் (நவிண்டில்), 2ஆம் இடம் - எம்.மகேந்திரராசா (அல்வாய்), 3ஆம் இடம் - ரி.ஜெகதீஸ்வரன் (கரவெட்டி).

☆ வட்டுக்கோட்டை:- முதலாம் இடம் - என்.மருதராஜன் (வட்டுக்கோட்டை), 2ஆம் இடம் - எஸ்.சபாபதிப்பிள்ளை (வட்டுக்கோட்டை), 3ஆம் இடம் - கே.கதிர்காமநாதன் (சித்தங்கேணி).

☆ சங்கானை:- முதலாம் இடம் - வி. சிவசோதிராசா (சண்டிலிப்பாய்), 2ஆம் இடம் - திருமதி என்.ஆனந்தராசா (சண்டிலிப்பாய்), 3ஆம் இடம் - எஸ். சுப்பிரமணியம் (சங்கானை).

☆ சாவகச்சேரி:- முதலாம் இடம் - திருமதி ரி.சிவகுமாரி (வரணி), 2ஆம் இடம் - கே.பாலசுந்தரம் (வரணி), 3ஆம் இடம் - ஏ.வஜீரன் (வரணி).

☆ தெல்லிப்பழை:- முதலாம் இடம் ஐ.சண்முகலிங்கம் (தெல்லிப்பழை), 2ஆம் இடம் - ஆர்.துரைராசா (தெல்லிப்பழை), 3ஆம் இடம் - ரி.கனகசபை (மல்லாகம்).

☆ உடுவில்:- முதலாம் இடம் - ஐ.ஜெகதீஸ்வரன் (சுன்னாகம்), 2ஆம் இடம் - ஐ.சொக்கையா (சுன்னாகம் தெற்கு), 3ஆம் இடம் - எஸ்.சுமனா (சுன்னாகம்).

### கோழி வளர்ப்பு

☆ யாழ்ப்பாணம்:- முதலாம் இடம் - எஸ்.சடாச்சரம் (திருநெல்வேலி), 2ஆம் இடம் - ஆர்.நிர்மலன், (கந்தர்மடம்), 3ஆம் இடம் - கே.குலசபாநாதன் (கந்தர்மடம்).

☆ கோப்பாய்:- முதலாம் இடம் - கே.அசோகரட்ணம் (நீர்வேலி தெற்கு), 2ஆம் இடம் - எம்.ஞானலிங்கம் (அச்சுவேலி தெற்கு), 3ஆம் இடம் - செ.லம்போதரன் (கோப்பாய்).

☆ பருத்தித்துறை:- முதலாம் இடம் - எஸ்.ஜெயபாலசிங்கம் (தும்பசிட்டி), 2ஆம் இடம் - ரி.செல்வகிருஷ்ணன் (புலோலி தெற்கு), 3ஆம் இடம் - கே.கணேசன் (தொண்டமனாறு).

☆ வேலணை:- முதலாம் இடம் - ரி.றொக்ஸியன் (புங்குடுதீவு), 2ஆம் இடம் - ஐ.மயில்வாகனன் (வேலணை மேற்கு), 3ஆம் இடம் - எஸ்.சிறிஸ்கந்தராசா (ஊர்காவற்றுறை).

☆ கரவெட்டி:- முதலாம் இடம் - கே.இராசேந்திரம் (கரவெட்டி), 2ஆம் இடம் - ரி.செல்வராசா (நெல்லியடி), 3ஆம் இடம் - பி.தனபாலசிங்கம் (கரவெட்டி).

☆ வட்டுக்கோட்டை:- முதலாம் இடம் - ரி.இராகவன் (வட்டுக்கோட்டை), 2ஆம் இடம் - எஸ்.தவரூபன் (காரைநகர்), 3ஆம் இடம் - கே.இராதாகிருஷ்ணா (வட்டுக்கோட்டை).

☆ சங்கானை:- முதலாம் இடம் - வி.பத்மநாதன் (நவாலி), 2ஆம் இடம் - ஏ.ஆனந்தகுமாரன் (மானிப்பாய்), 3ஆம் இடம் - எஸ்.ஜெயக்குமார் (சுழிபுரம்).

☆ சாவகச்சேரி:- முதலாம் இடம் - எம்.மகேந்திரன் (சாவகச்சேரி), 2ஆம் இடம் - வி.திருநாவுக்கரசு (மடத்தடி, சாவகச்சேரி), 3ஆம் இடம் - கே.பாலசிங்கம் (சரசாலை, வடக்கு).

☆ தெல்லிப்பழை:- முதலாம் இடம் - எஸ்.ஸ்ரீராமச்சந்திரன் (இளவாலை), 2ஆம் இடம் - திருமதி ரி.நகுலாம்பாள் (மல்லாகம்), 3ஆம் இடம் - கே.டயஸ் டிலாசால் (மல்லாகம்).

☆ உடுவில்:- முதலாம் இடம் - எஸ்.கணேசகுமார் (சுன்னாகம்), 2ஆம் இடம் - எம்.தவராசா (மயிலங்காடு, சுன்னாகம்), 3ஆம் இடம் - எஸ்.சிவானந்தம் (ஏழாலை). (ஜ-180)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,டிசெ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் கப்டன் எழிலரசன் (இரத்தினசிங்கம் இரத்தின சுதாகரன் - யாழ்ப்பாணம்) என்பவர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-3)

---

விராட் விஸ்வப் பிரமனே நம

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

13~12~2001

HAPPY



BIRTHDAY

### செல்வி ந.சஞ்சிகா

தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நந்தபாலன் - மதிவதனா தம்பதிகளின் செல்வப் புதல்வி

**ந.சஞ்சிகா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.12.2001) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, மனு மச்சாள் மற்றும் நல்லூரில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமா, அன்ரிமார், சித்தப்பா, மது அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வச்சந்நிதி முருகன் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென மனதார வாழ்த்துகின்றார்கள்.

*தற்காலிக முகவரி:*
*விஸ்வகுல வீதி,*
*பருத்தித்துறை.*

நா.நந்தபாலன் (அப்பா),
'கண்ணன் நகைமாடம்',
சாவகச்சேரி.

(95811)

---

We Serve



துர்க்கா துரந்தரி
செல்வி
### தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின்
77ஆவது பிறந்ததினத்தையொட்டி
தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறக்கொடை சபையின்
அனுசரணையுடன்
மானிப்பாய் வட்ட/இணுவில் லயன்ஸ் கழகங்கள்
இணைந்து ஒழுங்கமைக்கும்
கண்பார்வைக் குறைவினால் கல்வியைத் தொடரக் கஷ்டமுறும் வசதியற்ற மாணவருக்கான கண்பார்வைப் பரிசோதனையும் அவர்களுக்குரிய மூக்குக் கண்ணாடி பெற்றுக்கொடுக்கும் சேவையும்.

பயன்பெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர் முன்கூட்டியே விவரங்களுடன் பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

இடம் : இணுவில் மத்திய கல்லூரி *(ஆரம்பப் பிரிவு)*
காலம் : 15-12-2001 *(சனிக்கிழமை)*
நேரம் : காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை.

லயன் ரி.கைலாசநாதன்
*தலைவர்,*
*இணுவில் லயன்ஸ் கழகம்.*

லயன் டாக்டர்
நவமலர் கனகரத்தினம்
*தலைவர்,*
*மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்.*

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
*சேவை இணைப்பாளர்.*

(C/19710)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
09
-
06
-
1911



உதிர்வு
13
-
11
-
2001

### அமரர் சின்னத்தம்பி முருகேசு

(அருளம்பல உபாத்தியாயர்,
இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) (இணுவில்)

*வானும் மண்ணும் போற்ற வாழ்ந்தீர்!*
*வானுல கேகினும் மண் உமை மறவாது!!*

13.11.2001இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் ***இன்று (13.12.2001) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*** அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சாந்தினி"*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

- குடும்பத்தினர்.

(95773)

---

## திருமணப் பொன்விழா வாழ்த்து



அகவையில் பவளவிழாக் கொண்டாடுபவரும்
நாட்டுக்கூத்து அண்ணாவியாருமாகிய
**தொமிங்கு தேவசகாயம்பிள்ளை றொபேட் மாகிறேற் றூபியுடன்**

இணைந்த நல்லறமாகிய இல்லறவாழ்வில் பொன்விழாக் காணும் (13.12.2001) நன்னாளாம் இந்நாளில் இருவரும் வளமெலாம் நிறையப்பெற்று, சிறப்புடன் பல்லாண்டுகாலம் நலமாய் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழி நீடு!

*சீந்தில் பந்தல்,*
*இளவாலை.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(95774)

# உதயன்

## விபரீதத்துக்கு ஆயத்தம்!

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆரம்ப நடவடிக்கைகளே அதிருப்தி தருவனவாக உள்ளன.

அதுபோல, இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கவேண்டிய - அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட - நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எம்.பிக்களின் செயற்பாடும் ஆரம்பத்திலேயே சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பிரதமர் ரணில் தனது ஐக்கிய தேசிய முன்னணி மூலம் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் தேசிய பட்டியல் எம்.பிக்கள் பதின்மூன்று பேரின் பெயர் விவரங்களை அங்கீகரித்துத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்தப் பட்டியலில் ஆறு பேர் முஸ்லிம்கள்; இருவர் மலையகத் தமிழர். இலங்கைத் தமிழர் எவருமிலர்.

கொழும்பு மாவட்டம் உட்பட பல பகுதிகளிலும் இலங்கைத் தமிழர்கள் வழமைபோல் ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்கத் தவறவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனைத் தவிர, ஆளும் தரப்பில் இலங்கைத் தமிழர்கள் யாருமில்லை.

தேசியப்பட்டியல் மூலமாவது இந்தக் குறைபாட்டைப் பிரதமர் ரணில் போக்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சிறுபான்மையினரான இலங்கைத் தமிழர்கள் மீது அவருக்கு இருந்த 'கரிசனையை' அவரது தேசியப்பட்டியல் நியமனம் நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தனித்துப் போட்டியிட்டு, அதன்மூலம் தனியாக தேசியப் பட்டியல் எம்.பி.பதவிகளையும் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், முஸ்லிம்களுக்கும் தனது தேசியப் பட்டியலில் அளவுக்கு அதிகமாக ஒதுக்கி, ஆறு இடங்களை வழங்கிய ரணிலுக்கு, இலங்கைத் தமிழர்களுக்கு ஓரிடம் கூடக் கொடுக்க முடியவில்லை.

ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்ட போதிலும்கூட, தன்னுடைய செல்வாக்கினால் - பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் - நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்த ஒரேயொரு இலங்கைத் தமிழரான தி.மகேஸ்வரனுக்கும் கூட தனது அரசில் - அமைச்சரவையில் - பிரதமர் ரணில் உரிய இடம் அளிக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களில் ஒருவர் கூட இலங்கைத் தமிழர் இல்லை. இருந்தவருக்குக் கொடுத்த அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுக் கூட உருப்படியானது இல்லை.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் யாழ்.மக்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க "உங்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு புதிய அரசில் பொறுப்பேற்கப் போகும் மகேஸ்வரனுக்கு வாக்களித்து அவரது கரத்தைப் பலப்படுத்துங்கள்" என்று கோரியிருந்தார். தேர்தல் முடிந்த கையோடு அதையும் மறந்துவிட்டார் ரணில்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டும் ஒரே நோக்கத்துக்காகவே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்ற கோஷத்தோடு தேர்தல் களத்துக்கு ஒற்றுமை அணியாக வந்தோர் -

அந்த அலையில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதும் தத்தமது வழமையான கால் வாரும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதும் வேதனைக்குரியது.

அமைச்சுப் பதவியை யாருக்குக் கொடுக்கலாம்; யாருக்குக் கொடுக்கக் கூடாது என்ற விடயத்தில் அரசுத் தரப்புக்கு வழிகாட்டி - தேவைப்பட்டால் தங்கள் ஒட்டுமொத்த எம்.பிக்களின் எண்ணிக்கைப் பலத்தைக் காட்டி அரசுத் தரப்பை மிரட்டி - பணிய வைக்கும் திருவிளையாடலையும் சிலர் ஆரம்பித்திருக்கின்றனர்.

அதுவும் வடபகுதி புனர்வாழ்வு அமைச்சினை வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு தமிழ் எம்.பிக்கு வழங்காமல், சிங்களவருக்கு வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்த -

கூட்டமைப்பில் இருக்கும் ஏனைய தரப்பினருக்குத் தெரியாமல் தம்பாட்டில், அவர்களின் பலத்தையும் தங்களுடையதாகச் சேர்த்துக்காட்டி ரணிலை மிரட்டிப் பணிய வைக்க -

சில பிரதிநிதிகள் எடுத்த முயற்சிகள் வரவேற்கத்தக்கனவாக அமையவில்லை.

இலங்கைத் தமிழரின் நலனை நோக்காத ரணிலின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் தமிழர் நலன் மறந்து, கூட்டமைப்பினர் செய்யும் திருவிளையாடல்களும் எதிர்காலத்தில் நடக்கப்போகும் விபரீதங்களுக்கு ஆயத்த மணியாகவே படுகின்றது.

# வலி.கிழக்கின் சில இடங்களுக்கு இன்னும் மின் விநியோகம் இல்லை

## அது குறித்து பொதுமக்கள் விசனம்

வலி.கிழக்கு,டிசெ.13

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த 300இறகும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கோப்பாய் - நீர்வேலி பிரதான வீதி, இருபாலை - நீர்வேலி கரந்தன் வீதி, நீர்வேலி வடக்கு குறுக்கு வீதி போன்ற இடங்களைச் சேர்ந்த 300 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கே இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வலி.கிழக்கு பிரதேசசபை மின்சாரசபை அத்தியட்சகரிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளது. எனினும் இதுவரை அதற்குரிய எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ம-180)

### வினாத்தாள்கள் கப்பலில் இன்று வருகின்றன

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்கான வினாத்தாள்கள் இன்று வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படுகின்றன.

ஏற்கனவே வெளியிடப்பட்ட நேர அட்டவணை ஒழுங்கின்படி பரீட்சைகள் நடைபெறும் எனவும், விரிவான நேர அட்டவணை நாளை வெளியிடப்படும் எனவும் யாழ்வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தப் பரீட்சை பிற்போடப்பட்டிருந்தது தெரிந்ததே.(க-8)

## நாட்டு நடப்பு

### வீண் பழி உம்மை வந்து சேரலாமோ?

கூடத்தில் விழுந்த செல் குழியைத் தோண்ட
குழந்தைகள் துடிதுடித்து அலறி ஏங்க
ஓடியே குழந்தைகள் வெளியே செல்ல
ஊரடங்கு என ஒலிபெருக்கி உரத்தொலிக்க
கூடியே ஓட்டமாய் கோயில் சேர
குண்டுவந்து அருகினிலே அங்கும் விழ
ஓடிவர முடியாத கிழடிரண்டும்
ஒருவாறு பங்கரிலே பதுங்கிக்கொள்ள
எட்டத்தில் அழுகுரல் ஓசை கேட்க
எல்லோரும், அவ்வீட்டில் மாண்டாரென்ன
இட்டமுடன் தேர்தலில் வாக்களிக்க
இங்கிருந்து சென்றார்கள் எங்கள் வீரர்
பட்ட பாடத்தனையும் போக்காவிட்டால்
பலன் என்ன நீர் அங்கு காணப்போறீர்?
விட்டுவிட்டு நீர்வந்து வீடு சேர்ந்தால்
வீண் பழி உம்மை வந்து சேராதன்றோ?

- விகடகவி.

# ஆயுள்வேத வைத்தியர்களுக்கு வலி.கிழக்கில் பற்றாக்குறை

## மருத்துவ நிலையங்கள் 2 நாள்கள் மட்டுமே இயங்குகின்றன

வலி.கிழக்கு,டிசெ.13

வலிகாமம் கிழக்கு பிரதேச் சபைக்குட்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரிகளுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் இப்பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் வாரத்தில் இரு நாள்களே திறக்கப்படுகின்றன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கீழ் நீர்வேலி, அச்சுவேலி, புத்தூர், உரும்பிராய், கோப்பாய் ஆகிய உப அலுவலகங்களில் இயங்கி வரும் 5 ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் கடமையாற்ற இரு ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களே உள்ளனர்.

இவர்கள் தத்தமது வைத்தியசாலைகளை விட ஏனைய ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருப்பதால் இப்பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் அனைத்தும் வாரத்தில் இருநாள்கள் மட்டுமே இயங்கக் கூடியதாக உள்ளன.

இதனையடுத்து ஆயுள்வேத மருத்துவர் வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளருக்கும், கொழும்பு ஆயுள்வேத ஆணையாளர் தலைமை அலுவலகத்திற்கும் கடிதங்களை அனுப்புவது என்று வலி.கிழக்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-180)

### குடாநாட்டில் நவம்பரில் 362.9 மி.மீ மழைவீழ்ச்சி

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரையும் யாழ்.குடாநாட்டில் 1645.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாக திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 362.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதத்தில் தேர்தல் தினமான 5 ஆம் திகதி மட்டும் 48.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டதாகவும் பதிவுகள் மேலும் தெரிவிக்கின்றன.(க-10-180)

### முன்னாள் பிரதி அமைச்சரை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு,டிசெ.13

முன்னாள் பிரதி அமைச்சர் சலிந்த திஸநாயக்காவை கைது செய்வதற்கான உத்தரவை பிரதம நீதிவான் டெப் பிறப்பித்துள்ளார்.

தேர்தல் தினத்திற்கு முன்னர் வெல்லவ என்னும் இடத்தில் சாயனைப் பொருள்களின் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை சந்தேகநபர் தீ வைத்து எரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டதைத் தொடர்ந்தே கைதுக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

திஸநாயக்காவை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(க)

## தீவன விலை ஏற்றத்தால்

# குடாநாட்டு கோழிப் பண்ணையாளர் தொழிலைக் கைவிடும் இக்கட்டுநிலை

யாழ்ப்பாணம்,டிசெ.13

குடாநாட்டில் கோழிப் பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அதனைக் கைவிடும்நிலை ஏற்பட்டு வருவதாக கால்நடை வைத்திய அதிகாரிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

கோழித் தீவனங்களின் விலை அதிகரித்துச் செல்வதை அடுத்தே பண்ணையாளர்கள் கோழிவளர்ப்பைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புறொயிலர் தீவனத்தின் விலை தற்போது ஒரு மூடை 2 ஆயிரத்துக்கு மேலும், முட்டைத் தீவனத்தின் விலை ஆயிரத்து 600 ரூபாவுக்கு மேலும் விற்கப்பட்டு வருகின்றன. எனினும் கோழி இறைச்சியின் விலை உயரவில்லை. இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் உள்ளூரில் கோழித் தீவனத்தை உற்பத்தி செய்து குறைந்த விலையில் வழங்கிவந்தது. அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் தீவனத்தைப் பெறுவதில் பண்ணையாளர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்கள் கொழும்பில் இருந்து, தீவனத்தை எடுத்துவந்து குறைந்த விலையில் வழங்க முன்வராமை குறித்தும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ம-180)

## சாயிசிந்தனை



### முழுமையான மனிதன் யார்?

மனிதன் மிகப் பெரிய சக்தியின் வடிவம். அவனுள் இருக்கும் ஆற்றலை வேறெந்த உயிரினத்திலும் காண இயலாது. ஆனால் மனிதனுக்குத் தன்னுள் இருக்கும் ஆற்றலைப் புரிந்துகொள்ளும் திறன் இல்லை. அவனிடம் இரண்டு சக்திகள் இருக்கின்றன.

தெய்வீக ஆற்றலை அவன் புரிந்து கொள்வதில்லை. அதன் காரணமாக அவன் காணும் வாழ்க்கையில் தெய்வீகம் காணப்படுவதில்லை.

மனிதன் தன்னிடமிருக்கும் ஆறு தீய குணங்களால் மனம் மயங்கிப் போகிறான். காம, க்ரோத, மோக, லோப, மத, மாத்ஸர்யம் என்பன ஆறுவகை எதிரிகள். இவை எல்லாம் மிருககுணங்கள்.

இந்த மிருக சக்தியை, மிருக குணங்களை மனிதன் பயன்படுத்தலாகாது. அதற்குப் பதில் தெய்வீக ஆற்றலைப் பயன்படுத்தவேண்டும்.

மிருகத்துக்கு மனம் கிடையாது. மதி (மனம்), ஸ்திதி (உயர்நிலை), கதி (இலக்கு), சம்பதி (உயர்குணச் செல்வம்) இவையனைத்தும் தெய்வீக சக்தியினுள் அடக்கம்.

இந்த தெய்வீக சக்திகளை மறந்துவிட்டு மிருக குணங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான் மனிதன். அவன் 'மதி'யைப் பயன்படுத்தினால் அவனது 'ஸ்திதி' புரிய ஆரம்பிக்கும்.

அந்த 'ஸ்திதி' என்பது தனது உயர்ந்த தெய்வீக ஆற்றல் என்று மனிதன் தன் மதியை உபயோகிப்பதன் மூலம் புரிந்து கொள்ள இயலும்.

தன் நிலையை புரிந்துகொண்டு பிறகு தான் அடைய வேண்டிய இலக்கு (கதி) பற்றிய தெளிவு ஏற்படும். இப்படி இருந்தும் அவன் ஏன் மிருக குணங்களைப் பின்பற்றி செயல்படுகிறான்? ஏன் மிருகமாக நடந்து கொள்கிறான்?

தான் மனிதன் என்று கூறுவது பாதி உண்மைதான். உண்மையின் மறு பாதி நான் மிருகமல்ல என்பதுதான். நான் மனிதன், மிருகமல்ல என்னும் போதுதான் முழு உண்மை வெளிப்படுகிறது.

அப்போதுதான் அவன் தன்னை முழுமையான மனிதன் என அழைத்துக்கொள்ளஇயலும்.

*ஆதாரம்: சனாதன சாரதி 1998 - சித்திரை*

# சோளத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் கோழித்தீன் உற்பத்தி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.குடாநாட்டில் சோளத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து யாழ்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் தனது கோழித்தீன் உற்பத்தியை இடைநிறுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் குடாநாட்டில் சோளத்தைத் தாராளமாகப் பெறக் கூடிய நிலை இருந்தமையால் கோழித தன் உற்பத்தியல் சங்கம் தொடர்ந்து ஈடுபட்டுவந்ததாகவும்-

தற்பொழுது சோளத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக உற்பத்தியை இடைநிறுத்த வேண்டியுள்ளதாகவும் -

சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் சீரற்ற மின்சார விநியோகம் மற்றும் ஏனைய மூலப் பொருள்களின் பற்றாக்குறை ஆகியனவும் சீரான உற்பத்தியைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமைகசுக் காரணம் எனவும் அந்த வட்டாரங்கள மேலும் தெரிவித்தன.

சீரான உற்பத்தியில் ஈடுபட்ட வேளையில் மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் கிலோ கோழித்தீன் தயாரிக்கப்பட்டது.

குடாநாட்டில் அதற்கு அதிக கேள்வி இருந்ததாகவும் -

"உற்பத்தி இடைநிறுத்தப்பட்டதால் சந்தையில் கோழித்தீனின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்பகுதியில் இருந்து சோளத்தை எடுத்து வருவதற்கான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

அவை வந்து சேர்ந்ததும் மீண்டும் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்றும் -

சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10-180)

### உதயவாக்கு

கவலையால் மனிதன் இறப்பதில்லை; உலர்ந்து சருகாவான்.

### நாளை

கார்த்திகை 29
வெள்ளிக்கிழமை
திதி : அமாவாசை
பின்னிரவு 2.35 வரை
நட்சத்திரம்: கேட்டை
பின்னிரவு 4.48 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 6.21 - 7.51
ராகுகாலம் : 10.51 - 12.21
(பழைய நேரப்படி)

## யாழ்.பல்கலைக்கழக தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பதிவு செய்த பட்டதாரிகளின் கவனத்திற்கு

சேவா லங்கா ஸ்தாபனத்தாரின் SLF - NEIAP எனும் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் விடுவிக்கப்பட்ட - விடுவிக்கப்படாத பிரதேசங்களான அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சேவையாற்றுவதற்காக சமூகவியல் அல்லது பொருளியல் பாட பின்னணியைக் கொண்டதும் ஆங்கில அறிவும் மற்றும் இப்பிரதேசங்களில் சேவையாற்றும் தகைமையும், விருப்பும் கொண்ட பட்டதாரிகள் வேண்டப்படுகின்றனர். யாழ்.பல்கலைக்கழக தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பதிவுசெய்துள்ள இத்தகைமைவாய்ந்த பட்டதாரிகள் 15.12.2001இற்கு முன்னர் மாணவர் பிரிவுக் கட்டடத்தில் (STUDENT COMPLEX) அமைந்துள்ள தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் அதன் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
*யாழ்.பல்கலைக்கழகம்.* (C/19728)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/இடைக்காடு மகா வித்தியாலயம், இடைக்காடு, அச்சுவேலி

க.பொ.த.(உ/த) 2001 பரீட்சைப் பெறுபேறு

மேற்படி பரீட்சையில் கணிதத் துறையில் அதிவிசேட (3A) பெறுபேறுடன சித்தியடைந்த மாணவன்

**கைலைநாதன் தயாபரன்**



அவர்களையும், கணிதம், உயிரியல், வர்த்தகம், கலைப்பிரிவுகளில் மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்ற 17 மாணவ, மாணவிகளையும் அவர்களுக்கு சிறந்த முறையில் கல்வி கற்பித்த ஆசிரியர், அதிபர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/இடைக்காடு மகாவித்தியாலய
பழைய மாணவர் சங்கம்.
(95851)

## தொடர்புகொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் வருட பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய வர்களும், பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்காதவர்களும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தமது நிலைய சிரேஷ்ட விரிவுரையாளரை நிலையங்களில் தவறாது சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ம)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி,டிசெ.13

மார்கழி மாதத்தில் வரும் ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பரந்தாமன் ஆச்சிரமத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை "சிவத்தமிழ் மணி" ஆறுமா. துரைராசா தலைமையில் திருவாசக முற்றோதல் நிகழ்த்தப்படும்.. (க-117)

## தேர்தல் கடமை கொடுப்பனவு

தென்மராட்சி,டிசெ.13

நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் தமது கொடுப்பனவுக்குரிய வவுச்சரை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பாடசாலை அதிபர்களூடாக வலய நிதிக்கிளையில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## மனமுவந்த நன்றியும் பாராட்டும்

### யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
### க.பொ.த. (உ.த.) பரீட்சைப் பெறுபேறுகள் - 2001

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் (70%) 38 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளார்கள்.

சிறந்த பெறுபேறுகள் -

*வர்த்தகப்பிரிவு 2AB - இருவர்*
**செல்வன் இ.நந்தகுமார்**
**செல்வன் பொ.தர்மேந்திரா**

*கலைப்பிரிவு A2B - ஒருவர்*
**செல்வன் பொ.சுரேந்திரன்**

*விஞ்ஞானப்பிரிவு (கணிதம்) 3C - ஒருவர்*
**செல்வி கி.கலைவாணி**

மேற்படி பெறுபேறுகளைப் பெறுவதற்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.
(95858)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சின்னத்துரை தாயுமானவர்

அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் விற்பனையாளரும், அளவெட்டி ஆதி வீரபத்திரர் கோயில் தர்ம பரிபாலன சபைத் தலைவரும், அளவெட்டி மைலாந்த வைரவர் கோயில் தர்ம பரிபாலனசபைத் தனாதிகாரியுமாகிய

**சின்னத்துரை தாயுமானவர்** அவர்களின்

மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- அளவெட்டி ஆதி வீரபத்திரர் ஆலய பூசகரும்,
தர்ம பரிபாலன சபையினரும்,
அளவெட்டி மைலாந்த வைரவர் ஆலய பூசகரும்,
தர்ம பரிபாலன சபையினரும்.
(95854)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 07 - 1947



உதிர்வு 21 - 11 - 1995

### திருமதி பாலசுப்பிரமணியம் விக்கினேஸ்வரி

திதி:13-12-2001

*பண்போடு அறிவூட்டிப் பாங்காய் வளர்த்தீர்!*
*கண்போலக் கருதியமே எமைக் காத்துநின்றீர்!*
*மண்பொலியத் தெய்வமென மாண்புடனே வாழ்ந்தீர்!*
*எண்ணமதில் என்றுமுமைப் பூஜித்து வாழ்வோம்!*

*தகவல்:*
*திரு.ஐ.பாலசுப்பிரமணியம்,*
*ஆராச்சியார் வளவு,*
*கொக்குவில் கிழக்கு.*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.
(95853)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை தாயுமானவர் (அப்பர்)

(முன்னாள் விற்பனையாளர், அளவெட்டி, மல்லாகம் கூட்டுறவுச் சங்கம்)

அளவெட்டி வடக்கு, கலப்பனாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தாயுமானர் (கலப்பனாவோடை நடராச ஆசிரியரின் மகன் அப்பர் அண்ணை) அவர்கள் நேற்று (12-12.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (முன்னாள் ஆசிரியர், யா/சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், சங்கானை) - மீனாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நிகேதன் (ஆசிரியர், கலைக் கல்லூரி - வவுனியா), தர்சினி (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சகுந்தலாதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவராமலிங்கம் (வனத்திணைக்கள அதிகாரி, இரணைமடுக்குளம்) மற்றும் தர்மராசா ஆகியோரின் மைத்துனரும், சிவதாஸ், சிந்துஜா (பிரான்ஸ்), சாமினி (யாழ். பல்கலைக்கழக, கலைப்பீடம் - இரண்டாம் வருடம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு (பழைய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சத்தியகம்", மகாத்மா வீதி,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
தா.நிகேதன், (மகன்),
(கல்வியியற் கல்லூரி, வவுனியா).
(95852)



## The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நா.வின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபறா மல்வானி கணனிப்பயிற்சி நிறுவனமானது தனது சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இருபாலருக்குமான கணனிப்பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது.

*Courses:*

- ***Diploma in Ms Office ( 4 Months)***
- ***Diploma in Desktop Publishing ( 4 Months)***
- ***Diploma in Photo Graphic ( 3 Months)***
- ***Diploma in programming ( 4 months)***
- ***Diploma in Information Technology ( 4 Months)***
- ***Kids Course ( 2 Months)***

***Certificate Courses***

- ***Adobe PageMaker 6.5***
- ***Auto CAD 2000***
- ***Corel DRAW 9***
- ***Microsoft Access***
- ***Microsoft Word***
- ***Microsoft Excel***
- ***Microsoft Visual Basic 6.0***
- ***Microsoft Power Point***

- அலுவலக ஊழியர்களின் வசதிக்கேற்ப விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- தனிப்பட்ட கவனம் தேவைப்படுமிடத்து சிறு குழுக்களாக பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

விடுமுறைக்கால வகுப்புக்கள்

பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் வசதிக்கேற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**வகுப்புக்கள் யாவும் 18-12-2001 அன்று ஆரம்பமாக இருப்பதனால் 17-12-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

- நிர்வாகம்

# சர்வதேச இந்துமத குருபீடாதிபதி தலைமையில் உலக நாடுகளில் மகரஜோதிப் பெருவிழா

சிங்கப்பூர், மலேசியா, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா ஆகிய உலக நாடுகளில்

சபரிமலை ஸ்ரீஜயப்பசுவாமி மகரஜோதிப் பெருவிழா - ஆன்மீக சொற்பொழிவுகள்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் 14-12-2001 முதல் 21-12-2001 வரை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இந்துமத குருபீடாதிபதி 13-12-2001 உலகநாடுகளுக்குப் பயணமாகிறார்.

சர்வதேச இந்துமத குருபீடம், கொழும்பு.

(C/19732)



# உயர்ரக தென்னை நாற்றுகள் விற்பனை

முன்றரை வருடங்களில் பயன்தரக்கூடிய டிxரி நல்லின (HY-BRID) தென்னை நாற்றுகள் புத்தூர் கமநல கேந்திர நிலையத்தில் ரூபா 50/= விதம் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. ஏனைய நிலையங்களான புலோலி, உரும்பிராய், நல்லூர், தொல்புரம், கீரிமலை ஆகிய இடங்களில் நான்கு வருடங்களிலிருந்து ஐந்து வருடங்களில் பயன்தரக்கூடிய ரீxரி நல்லின தென்னை நாற்றுகள் ரூபா 40/= விதம் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

இந்நாற்றுகளை மொத்தமாகப் பெற விரும்புவோர் மாவட்டக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்வதோடு, சில்லறையாகப் பெற விரும்புவோர் அந்தந்தக் கமநல கேந்திர நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/19730)


# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 12 |
| - | - |
| 11 | 12 |
| - | - |
| 1961 | 2001 |

அமரர்
## செல்வஅருளினி செல்வராஜா
(அருள்வாக்கு கூறுபவர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வஅருளினி செல்வராஜா அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மதனா ஜுவல்லறி, மைதிலி ஜுவல்லறி. (95863) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

மெமோறியலில் 15ஆண்டுகளுக்கு மேலாக, ஐந்தாம் வகுப்புக் கற்பித்தலில் புகழ்பூத்து விளங்கி அன்றைய N.P.T.A. பரீட்சைகளில் மிகச் சிறப்பான பெறுபேறுகள் பெற தன்னை முழுமையாக அர்ப்பணித்த நல்லாசான்

## நா.பொன்னையா

அவர்கள் 11.12.2001 செவ்வாய்க்கிழமை கனடாவில் அமரத்துவம் அடைந்ததை அறிந்து ஆறாத்துயர் அடைகிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்களும்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலைக் குடும்பமும்.

(95855)

### புலமைப்பரிசில் கொடுப்பனவு தொடர்பான கூட்டம்

தென்மராட்சி,டிசெ.13

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலை மாணவர்களின் புலமைப்பரிசில் தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தரம் 6 தொடக்கம் 11 வரையும், தரம்12 தொடக்கம் 13வரையுள்ள வகுப்புக்களில் புலமைப்பரிசில் கொடுப்பனவைப் பெறத் தகுதியான மாணவர்களின் பெயர்ப்பட்டியல், எக்காலம் வரை புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விபரம் ஆகியவற்றைத் தவறாது கொண்டுவருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

★ ★ ★

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையுள்ள பாடசாலை அதிபர்களுக்கான தரம் 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு தொடர்பான முக்கிய கூட்டம் நாளைமறுதினம் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் 14ஆம் திகதி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-51)


NEWTON
342, ஸ்ரான்லி வீதி, யாழ்.
PERSONAL CLASS
Gr. 9, 10, 11
சுலபமான முறையில் அடிப்படையில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
R.MAHESWARAN
புதிய பிரிவு ஆரம்பம்: 15-12-2001
Sat, Sun 7a.m.-10a.m./4p.m.-6p.m.
Tue, Fri→5 - 6 p.m. (95864)
வாரத்தில் 4 நாள்கள்



லிபேட்டி அச்சுவேலி
சரத்குமார், கௌதமி, கவுண்டமணி, செந்தில் நடித்த
பெரிய கவுண்டர் பொண்ணு
தினசரி காட்சிகள் 10.30, 2.30 (புதிய நேரம்) (94972)



லஷ்சுமி இணுவில்
பிரசாந்த், ஷாலினி
பிரியாத வரம் வேண்டும் (ரீல்ஸ்)
தினசரி 10.30, 2.30 (பழைய நேரம்) (95867)



ராஜா யாழ்ப்பாணம்
நான்காவது வாரமாக
கமல், மனிஷா மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.30,2.30 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்) (C/19573)



நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன் நடித்த
பிரியாத வரம் வேண்டும் (ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்) (95859)



நிறஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, பிரபு, கௌதமி நடித்த
குருசிஷ்யன் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (95866)


# இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவுகள்

தென்மராட்சி,டிசெ.13

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுகள் இன்று புலோலியில் உள்ள பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளன.

2001 ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமென பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார். (ம-117)


*வணிகப் பிரமுகர்களே!*

மேலும் மேலும் உங்கள் பெயர், விலாசங்களை 2002ஆம் ஆண்டுக்கான கலண்டர் மூலம் ஊர்ஜிதம் செய்யுங்கள்.

எங்களிடம் நம்.1 வகைவகையான வண்ண வண்ண றோல் கலண்டர்கள் மற்றும் அழகிய மனேஜ்மன்ற் டயறிகளும் டெஸ்க் டயறிகளும் விற்பனைக்கு வந்துவிட்டன. கலண்டர்களை மொத்த மாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

சிவா நறுமணப் பூங்கா
288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 021-2567

குறிப்பு:-
மொத்தமாகக் கொள்முதல் செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எங்கள் காட்சியறையில் வந்து பாருங்கள்!
வண்ண வண்ண அழகிய கலண்டர் வகைகளை!! (95858)



மானிப்பாய்
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
பழைய மாணவர் சங்கம் வழங்கும்
யாழ். முன்னணிக் கலைஞர்கள் தைரியநாதன், செல்வம்
இணைந்து வழங்கும்
'ஞானசவுந்தரி'
(இசை நாடகம்)

*காலம்* :- 16.12.2001
(ஞாயிறு) முற்பகல் 10 மணி, பிற்பகல் 2.30 மணி.
*இடம்* :- மானிப்பாய் பிரதேச சபை கலையரங்கு

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
(95856)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வல்லிபுரம்
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

தெடுத்தனை, கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் சின்னத்தம்பி வல்லிபுரம் 10.12.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அண்மையில் (26.11.2001) காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வரஞ்சன் (ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு), செல்வநாதன் (லண்டன்), செல்வநேசன் (கனடா), செல்வச் செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஐ.தர்மலிங்கம், ஐ.லட்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், இந்திராணி, மரியவேயா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.செல்வரஞ்சன் (மகன்)
வ.செல்வநேசன் (மகன்)
ஐ.தர்மலிங்கம் (மைத்துனர்)

*கரவெட்டி.* (95857)

## நடனசண்முகராசா சிந்துஷா

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடனசண்முகராசா சிந்துஷா நேற்று (12.12.2001) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடனசண்முகராசா மற்றும் புஸ்பநிதி ஆகியோரின் அன்பு மகளும் கலிதரன், கஜுஜா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கந்தப்பிள்ளை மற்றும் செல்லம்மா காலஞ்சென்ற இந்திரலிங்கம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2001) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பாலன் (வான்)
(சிறிய தகப்பன்)

*3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.* (95862)

## சின்னத்தம்பி சிறீஸ்கந்தராஜா
(சிறீ)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிறீஸ்கந்தராஜா புதன்கிழமை 12.12.2001 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கனகம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மகனும் தவனேஸ்வரியின் அன்புக்கணவரும், சங்கவி, டிலக்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் விக்கினேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
வ.சரவணமுத்து
(சிறிய தந்தை)

*காளி கோயிலடி, தாவடி வடக்கு, கொக்குவில்.* (95860)

### சில தடைகள், தாமதங்கள் இருப்பினும்

# புதிய அரசு புலிகளுடன் விரைவில் பேச்சு நடத்தும்!

## பி.பி.ஸி. பேட்டியில் மகேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.13

★ ஐ.தே.கட்சி அரசாங்கம் மிக விரைவில் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தவிருக்கிறது. அதற்கு ஐ.தே.கட்சிக்கு சில தடைகள், இடைஞ்சல்கள் உள்ளன. அவற்றை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

★ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களை அகற்றுவதற்காகவே ஐ.தே.கட்சித் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. மற்றும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு அளித்த பேட்டியில் அமைச்சர் தி. மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசில் இந்து சமய விவகார அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் அவர் இந்தப் பேட்டியை வழங்கினார்.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்கினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள பலம்பொருந்திய அரசாக ஐ.தே.கட்சி அரசாங்கம் மாற்றமடையும்.

அப்போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்படுவதுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்நோக்கும் தடைகளும் நீக்கப்பட்டு விடும் - என்றும் அவர் கூறினார்.

நேற்றுவரை இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களுக்கு சந்திரிகா அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் -

புதிய அரசு பதவி ஏற்றதிலிருந்து இராணுவத் தாக்குதல்கள் ஓரளவுக்குக் குறைந்து விடும் எனத் தாம் நம்புவதாகவும் -

அவர் குறிப்பிட்டார். (ஐ-4)

---

### பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத் தலைவர்களான ஆறுமுகம் தொண்டமான், பெ.சந்திரசேகரன் ஆகியோருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சு டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவுக்கும் கல்வி அமைச்சு கருணசேன கொடித்துவக்குவுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியின் அபிவிருத்திக்கு உதவும் அமைச்சு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சுப் பொறுப்பு நூர்மன் மஷூர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சமுர்த்தி விவகார அமைச்சு எஸ்.பி.திஸாநாயக்கவுக்கே மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

பதவியேற்பு நிகழ்ச்சிகள் தொலைக் காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. வானொலிகளில் நேரடி வர்ணனைகளும் இடம்பெற்றன. (ஐ-3-4)

---

### புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

உடனடியாக மேலதிக படையினர் அங்கு அனுப்பப்பட்டு மறுநாள் அதிகாலை 1.30 மணியளவில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகள் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் -

அவர்களில் இருவரின் சடலங்களைப் படையினர் பின்னர் மீட்டதாகவும் -

இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரத்ன தெரிவித்தார்.

புலிகள் 120மி.மீ., 80 மி.மீ. மோட்டார்கள் மூலம் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும் அவர் கூறினார். சம்பவத்தை அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் கிழக்குப் பிரதேசத்தை நோக்கி இராணுவம் எறிகணைத் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து மூதூர் பிரதேசம் சுமுக நிலையை இழந்தது. கட்டுப்பாடற்ற பிரதேசத்திலிருந்து கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான பயணத்துக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. போக்குவரத்துகளும் தடைப்பட்டன. (ஐ-3-4)

---

### மகேஸ்வரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு தொடர்பான விடயத்தில் அரசு ஒரு போதும் அவரை புறக்கணிக்கமாட்டாது என்றும் -

அடுத்த ஒரு மாத காலத்துக்குள் மாற்று ஏற்பாடு மூலம் வடக்கு அபிவிருத்தி தொடர்பான அதிகாரப் பொறுப்பை அவரிடம் வழங்கத் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் -

பிரதமர் ரணில் மகேஸ்வரனுக்கு உறுதியளித்ததாகத் தெரியவந்தது.

கடந்த காலம் போன்று வடக்கு - புனர்வாழ்வு, புனரமைப்புக்கு எனத் தனியான அமைச்சு உருவாக்கப்படமாட்டாது என்றும் -

அதற்குப் பதிலாக முன்னர் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட திணைக்களங்கள், சபைகளை நிர்வகிக்கும் அதிகாரத்தை எதிர்காலத்தில் மகேஸ்வரனிடம் வழங்குவதாக ரணில் உறுதிமொழி வழங்கியதாவும் அறிய வந்தது.

இதன் பின்னரே இந்து சமய விவகார அமைச்சை ஏற்க அவர் சம்மதித்தார். (ஐ-3-4)

---


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில்
இரண்டாவது தடவையாகவும் வெற்றி பெற்று
இந்து கலாசார அமைச்சராகப் பதவியேற்றுள்ள
ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர்

## கௌரவ திரு.தியாகராசா மகேஸ்வரன்

அவர்களை

மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/19731)

S.V.முருகேசு உரிமையாளர்களும் ஊழியர்களும்.


# சமாதான முயற்சியை நோர்வே மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## இ.தொ.கா. கோரிக்கை

இலங்கையில் பதவியேற்றிருககும் புதிய அரசு மூலம் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று நோர்வே அரசை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுள்ளது.

இ.தொ.காவின் பிரமுகரான எம்.எஸ்.செல்லச்சாமி கொழும்பில் உள்ள நோர்வே தூதர் மூலம் நோர்வே அரசுககு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நோர்வேயுடன் ஒத்துழைப்பு வழங்காமையினால் நோர்வே அரசின் முயற்சிகள் முறிவடைந்தன.

தற்சமயம் பதவியேற்றுள்ள புதிய அரசு நேர்மையாகவும் திறந்த மனதுடன் இந்த விடயத்தில் செயற்படும் என நம்புகிறோம் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-4)

## தனங்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

தனங்களப்புப் பகுதியில் பெருமளவு ஆயுதங்களைப் படையினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. தொலைத்தொடர்பு சாதனம், ஒரு பட்டரி கொள்கலன், ஏழு வெடிக்க வைக்கும் உபகரணங்கள், ஆறு மீற்றர் வெடிக்கவைக்கும் வயர், 500 கிராம் உயர்சக்திவாய்ந்த வெடிமருந்து, மூன்று ரி 56 மகஸின்கள், இராணுவ சீருடை உட்பட ஏராளமான இராணுவ உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

---

### தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:-

- லெப்டினன்ட் கேணல் மனோஜ் (பாலசிங்கம் வசந்தகுமார் - திருமலை).
- மேஜர் குமாரவேல் அல்லது குச்சுமணி (செல்வராஜா ஆனந்தம் - மட்டக்களப்பு).
- இரண்டாம் லெப்டினன்ட் தேவன் (ஹென்றி செபஸ்தியான் - திருமலை)
- லெப்டினன்ட் கலைமதி (செல்வநாயகம் தர்சினி - திருமலை).

(ஐ-3-4-164)

---

### வாழைச்சேனை பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யது என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. செவ்வாய் இரவு 11.30 மணியளவில் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் ஒன்றரை மணி நேரம் தாக்குதல் நடந்தது.

பொலீஸ் நிலையம் மீதும் அருகிலுள்ள உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் மீதும் தாக்குதல்கள் நடந்தன. பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றித் தாக்கி அழித்த புலிகள், அங்கிருந்த ஆயுதங்கள், தொலைத்தொடர்புக் கருவிகள் என்பனவற்றை எடுத்துச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. நிலத்திற்கு அடியில் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த ஆயுதக் களஞ்சியத்தில் பெருந்தொகையான ஆயுதங்கள் இருந்தன. அவை அனைத்தையும் விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். பாவனைக்கு உதவாத ஆயுதங்களையும் முகாமுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர். தாக்குதலினால் அருகே இருந்த ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கட்டடமும் சேதமடைந்தது. அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த ஒருவரும் கொல்லப்பட்டார்.

ரெலிக்கொம் கோபுரமும் தொழில்நுட்ப உபகரணங்களும் சேதமடைந்துள்ளன. இதனால் வாழைச்சேனை, ஓட்டமாவடி தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. ஹபரண ஊடான மின்விநியோகமும் துண்டிக்கப்பட்டது. நேற்றுக் காலை அவை சீர்செய்யப்பட்டன.

சம்பவத்தை அடுத்து விநாயகபுரம், கண்ணன் கிராமம் ஆகியவை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று கான்ஸ்டபிள்கள் உட்பட ஆறு பொலீஸார் கொல்லப்பட்டனர். பதினொரு பொலீஸார் காயமடைந்தனர். புலிகள் மேற்கொண்ட தொடர் மோட்டார் எறிகணைத் தாக்குதல்களில் பொலீஸ் நிலையக் கட்டடம் பலத்த சேதமடைந்தது.

காயமடைந்தவர்கள் ஹெலி மூலம் பொலனறுவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பிலிருந்து மேலதிக படையினர் அங்கு அனுப்பப்பட்டனர்.

(ஐ-3-4)


## இலவச கணனிப் பயிற்சி

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சகல மாணவர்களும் கணனிப் பயிற்சிநெறிக்காக 15.12.2001ஆம் திகதிக்கு முன்னர் விரைவாக விண்ணப்பங்களை மேற்கொள்ளவும்.

(95827) Director, UNIVAC.

துரித மீட்டல்
வினா - விடை வகுப்பு
A/L 2002
LOGIC
விரிவுரை:
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்:- வியாழன் மாலை 5 மணி
உடுவில் மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION)
(95833)

ஏசன் உடுவில்
A/L DAY
2002
TA. - V.M.லிங்கம்
LOG. - S.சயந்தன்
H.C. - S.சுரேஸ்
DRAMA - S.றமேஸ்
வகுப்புக்கள்
நடை பெறுகின்றன
(மேலதிக விவரம் அலுவலகத்தில்)
(95841)

A/L 2002
துரித மீட்டல் வகுப்பு
புதிய பிரிவு ஆரம்பம்:-
இன்று 13.12.2001 வியாழன் காலை 9.00 மணி. (95830)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்.

# Computer Courses

**DIPLOMA IN MICROSOFT OFFICE**

- Introduction to Computer
- Ms Word 2000/ XP
- Ms Excel 2000/ XP
- Ms Access 2000/ XP
- Ms Power Point 2000/ XP
- Photo Draw 2000/ XP

Full Syllabus Coverd Duration: 6 Months

Special Offer Rs. 1900/=

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**

- Introduction to Computer
- Programming Techniques
- Ms Word 2000/ XP
- Ms Excel 2000/XP
- Ms Windows me
- Visual Basic 6.0
- C/C++
- HTML Programming
- E-Mail & Internet

Full Syllabus Coverd Duration: 9 Months

Special Offer Rs. 3250/=

பயிற்சிகள் ஆரம்பம்
16-12-2001 11 a.m.

Note:-
இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

**CERTIFICATE COURSES**

| | |
|---|---|
| Ms Word 2000 / XP | Visual Basic 6.0 |
| Ms Excel 2000 / XP | Corel Draw 10.2 |
| Ms Access 2000 / XP | Pascal |
| Pagemaker 7.0 | HTML |
| Auto Cad 2000i | Java |
| | C/C++ |
| (Each 3 Months) | (Each 4 Months) |

(95835)

JAFFNA TECHNICAL INSTITUTE
No. 07, Palaly Road, Jaffna.


# மரண அறிவித்தல்

## பிலிப் பரிசிலீன்

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த பிலிப் பரிசிலீன் நேற்று (12-12-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பிரகாசி அம்மாவின் அன்புக் கணவரும் அல்பிறட் (கொழும்பு), வின்ஷன், நீற்றா (நோர்வே), டேவிட் (நோர்வே), றெஜீனா (கொழும்பு), லெற்றீத்தா (ஜேர்மனி), வலன்ரைன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் அருட்சகோதரி டொர்சி (கண்டி கன்னியர்மடம்) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13-12-2001) வியாழக்கிழமை குழமங்கால் மல்லாகம் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீதிமன்ற வீதி, மல்லாகம். (C/19734) ப.வின்ஷன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.